# நூற்றாண்டு விழா மலர்



# க. இ. குமாரசுவாமி

[ஆன்மீக, சமூக சேவையாளர்]

கோப்பாய்

1916 - 2016

# கோப்பாய் சமூக சேவையாளர்
# அமரர் க.இ.குமாரசுவாமி
## அவர்களது

# ஜனன தின நூற்றாண்டு விழா மலர்

**2016**

# அமரர் க. இ.குமாரசுவாமி
# நூற்றாண்டு ஜனன தின விழா - 2016

| | |
|---|---|
| **மலரின் பெயர்** | - கோப்பாய் சமூக சேவையாளர் அமரர் க.இ.குமாரசுவாமி அவர்களது ஜனன தின நூற்றாண்டு விழா மலர் - 2016 |
| **மலரின் கருப்பொருள்** | - சமூக சேவையாளர் அமரர் க. இ.குமாரசுவாமி அவர்கள். |
| **மலர் தொகுப்பாசிரியர்** | - திரு. பொ.விக்கினேஸ்வரலிங்கம் கோப்பாய். |
| **மலர் வெளியீட்டுரிமை** | - கோப்பாய் சமூகசேவா சங்கம் |
| **அச்சிடல்** | - குரு பிறிண்டேர்ஸ் ஸ்தாபனம் - திருநெல்வேலி |
| **முதல் வெளியீடு** | - 14.08.2016 |
| **வெளியீட்டு வைபவம்** | - அமரர். க. இ. குமாரசுவாமி அவர்களை மானசீகமாக கௌரவிக்கும் நூற்றாண்டு ஜனன நினைவு விழா -2016 -14.08.2016 |
| **மலரின் பக்கங்கள்** | - 56 |
| **மலர் பிரதிகள்** | - 200 |
| **வெளியீட்டு இடம்** | - கோப்பாய் சமூக சேவா சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், முதியோர் சங்கங்களின் நிர்மான சங்க வளாகம், கோப்பாய். |



## மக்கள் சேவையே மகேசன் சேவையென சேவையாற்றிய பெரியார் அமரர் க. இ. குமாரசாமி அவர்களின் ஜனன தின நூற்றாண்டுவிழா 2016

கோப்பாய் கிராமத்தின் வளத்திற்காகவும், வாழ்விற்காகவும் எமது சமூகத்தின் முன்னோர்கள் பலர் தமது அர்ப்பணிப்பான பணிகளை ஆற்றி இன்றைய நிலை வரை கிராமத்தை வளர்த்துள்ளனர். அவை ஒவ்வொன்றும் சம காலத்தில் வாழும் எம்மவர்கள் ஒவ்வொருவராலும் நன்றியுணர்வோடு நினைவு கூர்ந்து மதிப்பளிக்கப்பட வேண்டியவை அந்தவகையில் பல பெரியார்கள் பல்வெறு துறைகளில் ஒன்றிற்கோ, சிலவற்றிற்கோ அரும்பணி யாற்றியிருப்பதை கிராம வரலாறு தெளிவாகக் காட்டி நிற்கின்றது. இவையெல்லாம் எம்மால் நோக்கும் போது நாம் இறைவனுக்கு சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துவதற்கு எம்மைத் தூண்டுகின்றது. ஏனெனில் அத்தகைய சேவையாளர்களை எமக்கு கொடையாக வழங்கியவர் இறைவனாக இருப்பதினால். ஆகவே சேவையாளர்களை நன்றியுணர்வோடு மதிக்கின்றோம், நினைவு கூர்கின்றோம் என்றால் அதுவே இறைவனுக்கு நாம் செய்யும் உண்மையான வணக்கம் பிரார்த்தனை என்பதை ஆன்மீக சமூக தத்துவ ஞானிகளது முடிந்த முடிவாகவுள்ளது.

அந்தவகையில் எங்கள் மத்தியில் தானும் நன்கு வாழ்ந்து ஊருக்கம் நாட்டிற்கும் நல் வாழ்வழித்த க. இ. குமாரசுவாமி அவர்களது சேவை விசேடமாக எம்மால் நன்றி கலந்த வணக்கத்திற்குரியது. ஏனெனில் கோப்பாயில் வளத்திலும் வாழ்விலும் எவை எவை வளமாக உள்ளனவோ அத்தனையிலும் ஒரே அக்கறையுடன் உணர்வாலும் உடலாலும் ஆரிய பணிகள் ஆற்றிய சாதனைகள் படைத்த செயல் வீரராகவும் பன்முக செவையாளராகவும் அவருக்கு நிகர் அவராகவே விளங்கினார்.

அவரது அத்தகைய சேவை தற்போதுள்ள மூத்தோர்களால் அறியப்பட்டது உணரப்பட்டது. அவற்றை இன்றுள்ள இளைய

சமூகத்திற்கு அறியத் தர வேண்டியது எமது தலையாய கடமையாகும். அது மட்டுமல்ல அடுத்த சந்ததிக்கும் அவை பரிமாறப்படுவதற்கு ஆவணப்படுத்தப்பட வேண்டியவை. அதுவே எமது இறை வணக்கத்திற்கும் இறை மதிப்பிற்கும் நாம் செய்யும் உண்மையான அடையாளமாக இருக்கின்றது எனக் கருதுவதினால் இம் மலரைக் கோப்பாய்க் கிராமத்திற்கு அன்புடன் சமர்ப்பிக்கின்றோம். இதனைத்தான் தன்னடக்கமான தார்மீகம் நிறைந்த மனிதத்துவம் நிறைந்த பணியாகத் தெய்வீகக் கடமையாகக் கருதி எம் அன்பிற்குரிய உறவுகள் அனைவர்க்கும் சமர்ப்பிக்கின்றோம். இப் பணிக்கு உதவிய அத்தனை உள்ளங்களும் இறை ஆசீர்வாதம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம். இம்மலர் சகல உள்ளங்களுக்கும் பயன்பட வேண்டி இறைவனை வேண்டுகின்றோம்.

**இதழ் ஆசிரியர்**
**பொ.விக்கினேஸ்வரலிங்கம்**

இம் மலரை மிகக் குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டு அழகிய வடிவத்தில் வழங்கிய குரு பிறிண்டேர்ஸ் பதிப்பகத்திற்கு. எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# அமரர் திரு. க.இ.குமாரசாமி J.P

## அவர்களது ஜனன

## நூற்றாண்டு பூர்த்தி ஞாபகார்த்த வெளியீடு

### அன்னாரது சுயவிபரக் கோவை

பிறந்த திகதி :- 30.06.1913

இறைபதம் அடைந்த திகதி :- 17.12.2009

### படித்த பாடசாலைகள்

கோப்பாய் C.H.S. பாடசாலை 1 - 5ம் வகுப்பு

கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி

கோப்பாய் அரசினர் சாதனா பாடசாலை

கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை

### மேலதிக கல்வித் தராதரம்

பிரவேச பண்டிதர்

பாலபண்டிதர்

இளம் சைவ புலவர்

சித்திர வித்தகர்

### ஆசிரிய சேவை

1. கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை உதவி ஆசிரியர் - 01.10.30 - 30.06.1931
2. சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை - 01.07.1931 - 31.07.1932
3. கோப்பாய் ஆசிரிய கலாசாலை - 01.07.1932 - 31.07.1934
4. கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை உதவி ஆசிரிரயர் - 1934 - 1938
5. கொக்குவில் நாமகள் வித்தியாசாலை - 1938 - 1943

6. கேணியதேரு துவிபாஷா பாடசாலை - 1944 - 1946
7. கொக்குவில் நாமகள் வித்தியாசாலை - 1947 - 1952
8. நல்லூர் செங்குந்தா துவிபாஷா பாடசாலை - 1952 - 1955
9. உரும்பிராய் சைவவித்தியாசாலை - சிரேஷ்ட உதவி ஆசியர் 1956 - 1958
10. ஈவினை விக்கினேஸ்வர வித்தியாசாலை - தலைமை ஆசிரியர் - 1959 - 1962
11. கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை - தலைமையாசிரியர் 1963 - 1970

**சமூக சேவைகள் சங்கங்களில் ஆற்றிய சேவைகள்**

1. கோப்பாய் வடக்கு வாலிபர் சங்க காரியதரிசி தொடர்ந்து தலைவர் - 1934 - 1942
2. கோப்பாய் வடக்கு கிராம முன்னேற்ற சங்க காரியதரிசி தொடர்ந்து தலைவர் - 1948 - 1974
3. கோப்பாய் அம்மாள் சன சமூக நிலையமும் இலக்குமி வாசிகசாலையும் - 08.10.1948 - 1958
4. கோப்பாய் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஆரம்ப செயலாளரும் தொடர்ந்து தலைவரும்.
5. கோப்பாய் வடக்கு சமூக சேவா சங்கத்தின் தலைவர் 28.4.1971 இல் இருந்தது.
6. கோப்பாய் வடக்கு அந்திய கால சேவைசங்கம் 1954 - 1965 செயலாளரும் தொடர்ந்து தலைவர்
7. அகில உலக இந்துமாமன்ற நிர்வாக சபை உறுப்பினர் 29.07.1979 இல் இருந்து.
8. கோப்பாய் கிராம சங்க உறுப்பினர் - 1938 - 1947
9. யாழ் இந்து சமய பேரவையை ஆரம்பித்தவர்களில் ஒருவரும், உபதலைவரும்

## கூட்டுறவு பணியில் சேவைகள்

1. கோப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்கத் தலைவர் - 22.01.1942 - 18.12.1948
2. கோப்பாய் ஐக்கிய பண்டக சாலை செயலாளர் தொடர்ந்து தலைவர் - 10.4.1942 - 29.10.1971
3. கோப்பாய் வடக்கு விவாசாய விருத்தி விற்பனை ஐக்கிய சங்கம் - தலைவர் 10.06.1950 - 1970 வரை
4. கோப்பாய் சிகறெற் புகையிலை உற்பத்தியாளர் சங்கத்தை ஆரம்பித்தவரும், அதன் சமாசத்தின் செயலாளரும்
5. கோப்பாய் சுருட்டுத் தொழிலாளர் ஐக்கிய சங்கத்தின் செயலாளரும் தொடர்ந்து தலைவரும்
6. வலி கிழக்கு ஐக்கிய பண்டகசாலைகளின் சமாசத்தின் பொருளாளர் தொடர்ந்து தலைவர் - 1958 - 1963
7. வலி கிழக்கு தென் பகுதி பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் சமாசத்தின் தலைவர் 1971 - 1974
8. வலி கிழக்கு பகுதி விவாசாய உற்பத்தியாளர். கூட்டுறவு சங்க சமாச அதிகார சபை அங்கத்தவர் (NDAPC)
10. யாழ் கூட்டுறவு மாகாண வங்கி அதிகாரசபை உறுப்பினர்.
11. இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை (NCC) ஆரம்பகால உறுப்பினர்.

## ஆலயப்பணிகள்

1. பலாணை கண்ணகை அம்மன் பரிபாலன சபை செயலாளர் தொடர்ந்து தலைவர் - 8 வருடங்கள்
2. கோப்பாய் சித்திர வேலாயுத சுவாமி கோவில் பரிபாலன சபை உறுப்பினர் - 5 வருடங்கள்
3. கோப்பாய் வடக்கு அடைப்பந்தாளி வைரவர் பரிபாலன சபை உறுப்பினர் - 2 வருடங்கள்.
4. வடகோவை மகிழடி வைரவர் கோயில் 21.07.1982 ஆலோசனை அங்கத்தவர்.

**அன்னாரால் வெளியிடப்பட்ட நூல்கள்**

1. கோப்பாய் வரலாறு
2. யாழ் கூட்டுறவு
3. யாழ் தமிழரும் இந்துமத வழிபாடுகளும்
4. கண்ணகி சரிதையும் வரலாறுகளும்
5. கற்புடைய மாதர் வழிபாடு

## நூல்கள் ஆய்வு செய்து வாழ்த்துரை வழங்கியவர்கள்.

1. கோப்பாய் வரலாறு - ஆய்வு செய்து வாழ்த்துரை வழங்கியவர் - திரு. ச. சத்தியசீலன் M.A தலைவர் வரலாற்றுத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அணித்துரையை திரு. பெ. கனகசபாபதி J.P தலைவர் யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சபை iii சிறப்புரையை லயன் வைத்திய கலாநிதி வை. தியாகராசாவும் வழங்கியிருந்தனர்.
2. கண்ணகி சரிதையும் வரலாறுகளும் இதனை ஆய்வு செய்து வழங்கியவர் பேராசிரியர் கலாநிதி சண்முகதாஸ் - பீடாதிபதி கலைப்பீடம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
3. இலங்கையில் கற்புடை மாதர் வழிபாடு இதனை ஆய்வு செய்து வழங்கியவர் திருமதி. நாச்சியார் செல்வநாயகம் தலைவர் இந்து நாகரிகத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**அமரர் அவர்களது குடும்ப விபரம்**

மனைவி பெயர் :- அமரர் சரஸ்வதி (ஆசிரியை)

பிள்ளைகள் விபரம் :-

அமரர் சிவகுமார்<br>
திருமதி இந்திரகுமாரி சிவானந்தன்(ஓய்வு பெற்ற உப அதிபர்)<br>
அமரர் அரவிந்தகுமாரி ( லோகேஸ்வரன் ஆசிரியை)<br>
கிரிஜகுமாரி ஜெயரட்னம் (கணக்காளர்)

திரு. உருத்திரகுமார் (கணக்காளர் கொழும்பு)
திருமதி வசந்தகுமாரி மகேசன் (பல்வைத்தியர் - லண்டன்)

ஒரு கிராமத்தின் சிறப்பானது அக்கிராமத்தில் வாழ்ந்த வாழ்ந்து வருகின்ற பெரியோர்கள், கல்விமான்கள், ஆன்மீக சிந்தனையாளர் ஆகியோரிலேயே தங்கியுள்ளது என்று கூறினால் மிகையாகாது. அவ்வாறு வாழ்ந்தவர்களின் வரலாற்றுச் சிறப்புக்களையம், பதிவுகளையும் எமது இளைய தலைமுறையினர் அறிந்து கொள்வதற்கு வழி செய்து கொடுப்பது எமது தலையாய கடமையாகும். அவ்வாறு அறிந்து கொள்ளக் கூடிய பலர் எமது எமது கிராமத்தில் வாழ்ந்து உள்ளனர். அவர்கள் ஆற்றிய சேவைகள், எமக்காக ஆக்கி வைத்த வழங்கள் காரணமாகத்தான் நாம் இன்று வழமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

எமது கிராமத்தில் அமைந்துள்ள கோவில்கள், பாடசாலைகள், வைத்தியசாலை, பொதுச்சேவைக் கட்டிடங்கள் யாவும் தானாகத் தோன்றியவை அல்ல பல பெரியோர்களது அயராத உழைப்பாலும் வியர்வை சிந்திய சேவைகளாலும், நன் கொடைகளாலும் உருவானவையாகும். அவ்வாறு உருவாக்கியவர்களை நாம் நன்றியுடன் நினைவு கூர்வது மிக மிக இன்றியமையாத கடமையாகும்.
அதனால் தான் திருவள்ளுவ பெருந்தகையும்

" எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் திருக்குறளை நமக்காக ஆக்கிவைத்துப் போயுள்ளார்.

இவற்றையெல்லாம் எமது இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்லும் பாரிய பொறுப்பு நம் எல்லோருக்கும் உண்டு. அந்த வகையிலே ஒரு நூற்றாண்டு கடந்த அமரர் குமாரசாமி அவர்கள் எமக்காக ஆற்றிய சேவைகளை நினைவு கூர்வது மிகவும் பொருத்தமானதாகும். அந்தவகையில் அமரர் அவர்களினாலேயே

ஆரம்பித்து வைக்கப்பட்ட கோப்பாய் வடக்கு சமூகசேவா சங்கமானது மேற் கொண்டிருப்பது மேலும் சிறப்புமிக்க ஒன்றாகும்.

அமரர் அவர்கள் ஆசிரியராக கடமையாற்றி வந்த போதிலும் தனத கடமைக்கு புறம்பான நேரத்தை மக்கள் நலனுக்காகவே செலவு செய்தார். அவர் இளமையாக இருந்த போதே மிகவும் துடிப்பு மிக்க ஒருவராக காணப்பட்டார். தனது கிராமத்தில் வாழ்ந்த கல்வி அறிவில் குறைந்த ஏழை மக்கள் படும் கஸ்டங்களை கண்டு மன வேதனை அடைந்தார். இந்த மக்களை எப்படி மீட்டு எடுக்கலாம் என்று சிந்தித்தார். அதற்கு ஒரே வழி இளைஞர்களை ஒன்று கூட்டி அவர்கள் மூலம் கிராமத்தை கட்டி எழுப்புவதே ஆகும். என்று எண்ணினார். கிராமத்தில் வாழ்ந்த இளைஞர்களை ஒன்று கூட்டி வாலிபர் சங்கத்தை உருவாக்கினார். நவீன விவாசாயப் புரட்சியில் ஈடுபட வைத்தார். மக்கள் அறிவை மேம்படுத்துவதற்காக வாசிகசாலைகளை அமைத்துக் கொடுத்து மக்கள் தமது ஓய்வு நேரத்தை புத்தகங்கள் புதினப்பத்திரிகைகள் வாசிப்பதற்கு ஏற்ற வசதிகளை செய்வதற்கு உதவினார். எமது கிராமத்தில் உள்ள அம்மன் கோவிலடி வாசிகசாலையும் கந்தசாமி கோவிலடி வாசிகசாலையும் அவரது பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்டவையாகும். விவாசாய உற்பத்தியில் எமது கிராமம் ஓர் முன்னோடிக்கிராமமாக மிளிரச் செய்த பெருமை அமரர் அவர்களையே சாரும் விவசாய மக்கள் தங்களது வருவாயையும் சேமிப்பையும் அதிகரிப்பதற்காக கூட்டுறவுத்துறை மிக இன்றியமையாதது என்பதை உணர்ந்து விவசாய மக்களுக்காக ஐக்கிய நாணய சங்கங்களை உருவாக்கி அதில் அவர்களை அங்கத்தவர்களாக இணையச் செய்து அவற்றை திறம்பட இயங்கச் செய்த பெருமை அவரையே சாரும். அதனை தொடர்ந்து கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவற்றையும் திறம்பட இயக்குவதற்கு உதவி புரிந்தார். அவரது காலத்தில் எமது கிராமத்தில் சுருட்டுத் தொழிலில் ஈடுபட்ட பல்ரும் இருந்தார்கள். இவர்களுக்காக சுருட்டுத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து அதன்மூலம் தொழிலாளர்களுக்கு பல

நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தார். அங்கு உற்பத்தியாகும் சுருட்டுக்களை இலங்கையின் தென்பகுதிகளுக்கு அனுப்பி வைத்து சுருட்டுத் தொழிலாளர்களது வருவாயை அதிகரிக்கச் செய்த பெருமை அவருக்கே உரித்தானதாகும். மேலும் விவசாயிகளை சிகறெற் புகையிலை உற்பத்தியில் ஈடுபடச் செய்து அப்புகையிலையை உலர்த்துவதற்காக பல போறணைகளை கோப்பாய் வடக்கு ஞான வைரவர் கோவிலுக்கு அரகாமையில் அமைத்து, சிகறெற் புகையிலை உற்பத்தியில் கோப்பாய் கிராமமே முன்னிலை கிராமமாக மிளிரச் செய்த பெருமை இவரையே சாரும். இதன் காரணமாக பலர் வேலை வாய்ப்புக்களை பெறக்கூடியதாகவும் இருந்தது. இப்புகையிலை உற்பத்தி புகைத்தல் தடை செய்யப்பட வேண்டும் என்ற காரணத்தால் படிப்படியாக கைவிடப்பட்டது. கோப்பாய் வடக்கில் வாழ்ந்த விவசாயிகள் வெங்காயம், வாழைச்செய்கையில்கூடுதலாக ஈடுபட்டு வந்தனர். இவ்விவசாயிகளை ஒன்று சேர்த்து விவாசியகள் சங்கத்தை உருவாக்கினார். இந்த விவசாயிகள் சங்கத்துக்கும் இவரே தலைவராக இருந்து வழி நடாத்தி வந்தார். இவரது முயற்சியால் கோப்பாய் வடக்கில் வெங்காயச் சங்கம் என்னும் பாரிய கட்டிடம் அமைக்கப்பட்டது. இங்கிருந்து வெங்காயம், வாழைக்குலை, உருளைக்கிழங்கு போன்றவற்றை இலங்கையின் தென்பகுதிகளுக்கு புகையிரதம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. தற்போது இக்கட்டிடம் பாழடைந்த நிலையில் உள்ளதை நாம் காணலாம் அமரர் அவர்கள் இன்று உயிரோடு இருந்திருந்தால் இந்தக் கட்டிடத்துக்கு பரிதாப நிலை ஏற்பட்டிருக்கவே மாட்டாது. இது ஒரு பொருளாதார உற்பத்தி மையமாகவே திகழ்ந்தது கொண்டு இருக்கும் என்பதில் ஐயமில்லை. விவசாயிகள் மத்தியில் இவருக்கிருந்த பெருமதிப்புக் காரணமாகவும் கூட்டுறவுத்துறையில் எமது கிராம மக்கள் காட்டிய ஆர்வம் காரணமாகவும் விவசாய இலகாவிலும் கூட்டுறவுத் துறையிலும் இவர் பெரும் மதிப்பு பெற்றவராக இருந்தார். வலிகிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவ சங்க சமாசத்தின் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். இவரது நேர்மை காரணமாக இவருக்கு கூட்டுறவுத்துறையிலும் விவசாயத்துறையிலும் இருந்து பல

கௌர உயர் பதவிகள் கிடைக்கப் பெற்றன. இவர் எமது கிராமத்தில் மட்டும் அல்லாது அயற் கிராமங்களிலும் நன்மதிப்பு பெற்ற ஒருவராக இருந்ததன் காரணமாக வகித்தபதவிகள் விபரங்களை நீங்கள் இப்புத்தகத்தின் முற்பகுதியில் கானலாம். இவர் எமது கிராமத்தில் மட்டுமல்லாது அயற் கிராமங்களிலும் நன்மதிப்புப் பெற்றவராக விளங்கினார்.

அமரர் குமாரசாமி அவர்கள் கிராமத்துப் பிள்ளைகளின் கல்வியில் அதிகம் அக்கறை கொண்டவராக செயலாற்றி வந்தார். தனது பிள்ளைகள் போன்று கிராமத்தில் வசிக்கும் ஏனைய பிள்ளைகளும் சிறந்த கல்வியை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டவராக வாழ்ந்து வந்தார் அதன் காரணமாக சரவணபவானந்த வித்தியாசாலை, கிறிஸ்தவ கல்லூரி ஆகிய இரு பாடசாலைகளினதும் கல்வி வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார். இரு பாடசாலைகளினதும் பழைய மாணவர்கள் சங்கம, பாடசாலை அபிவிருத்தி சங்கம், பெற்றார், ஆசிரிய சங்கம் ஆகியவற்றில் உறுப்பினராக இருந்து பாடசாலை இருந்து பாடசாலைகளின் வளர்ச்சிக்கு பெருந் தொண்டாற்றிய ஒருவராவார்.

கோப்பாயில் கல்வியியற் கல்லூரி அமைய வேண்டும் என்பதிலும், அதற்கான காணியை பெற்றுக் கொடுக்க வேண்டும். என்பதிலும் முனைப்போடு ஈடுபட்டு வந்தார். கௌர பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவரது காணியை வழங்க வேண்டும். என்பதில் பல வேண்டுகோள்களை விடுத்திருந்தார். காணி வழங்கப்பட்டு ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் டாக்டர் தியாகராசா அவர்களுடன் சேர்ந்து பல ஆரம்ப முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தார்.

மேலும் கோப்பாயில் ஓர் வைத்தியசாலை அமைக்க வேண்டும் என்பதில் மிகவும் முனைப்புடன் ஈடுபட்டு வந்த ஒருவராவார். ஒவ்வொரு

தேர்தல் தொகுதியிலும் ஒவ்வொரு வைத்தியசாலை அமைக்க வேண்டும் என்ற அப்போதைய அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு அமைய கோப்பாயில் வைத்தியசாலை அமைப்பதற்கான காணியை கோப்பாய் வடக்கு விவசாய பெருமக்களான ஆறுமுகம் நாகமுத்து, சங்கரப்பிள்ளை கந்தப்பிள்ளை, வயிரமுத்து அம்பலவாணர், வயிரமுத்து ஆறுமுகம் என்பவர்களிடம் இருந்து 3 ஏக்கர் காணியை இலவசமாக பெற்றுக் கொடுத்த பெருமை அமரர் அவர்களுக்கே உரியதாகும். இக்காணியை அவர் பெற்றுக் கொடாமல் விட்டிருந்தால் வைத்திய சாலை கோப்பாயில் அமைந்திராது. காணி அன்பளிப்பு செய்த பின்னரும் வைத்தியசாலை அமைப்பதற்கான பல முயற்சிகளை அமரர் MS. இராசசிங்கம், AC. செல்வராசா, திரு. அ.ஜெயரத்தினம், அமரர் சீ.கந்தையா போன்றவர்களின் ஒத்துழைப்புடன் பாராளுமன்ற உறுப்பினர்களையும் அமைச்சர்களையும் பல தடவைகள் கலந்துரையாடியதன் பயனாகவே வைத்தியசாலை நிறுவப்பட்டத. இம்முயற்சியில் அப்போது அமைச்சராக இருந்த சேர். கந்தையா வைத்தியநாதனின் பங்களிப்பு காரணமாகவே வைத்தியசாலை அடையப்பெற்றது என்று கூறினால் மிகையாகாது.

இவ்வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பல வருடங்கள் வைத்தியசாலை அபிவிருத்திச்சாலையின் தலைவராக இருந்து வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளில் பெரும் பங்காற்றி வந்தார். அடுத்து தற்போது நம்முன் அழகிய தோற்றத்துடன் காட்சிதந்து கொண்டிருக்கும் கோப்பாய் பிரதேச செயலக கட்டிடம் அமைவதில் ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டவர்களில் அமரர் குமாரசாமி அவர்களும், டாக்டர் தியாகராஜா அவர்களும் மிகவும் முக்கியமானவர்களாவார். மேற்படி கட்டிடம் அமைப்பதற்கான காணியை அரசாங்கத்திற்கு பெற்றுக்கொடுக்க வேண்டிய நிலை இருந்தது. அதற்கு காணி உரிமையாளர்களிடம் சென்று காணியை விலைபேசி வேண்டி அரசாங்கத்திற்கு பெற்றுக்கொடுத்த பெருமை அவர்களுக்கே உரியதாகும். இவ்விடயத்தில் அப்போது கடமையில் இருந்த பிரதேச

செயலாளர் திரு. கேதீஸ்வரன் அவர்களும் கிராம அலுவலர்களும் மக்களிடம் இருந்து காணிக்கான பணத்தை சேகரித்து கொடுத்தமையை என்றுமே மறக்க முடியாது. அவ்வாறு காணியை பெற்று அரசுக்கு வழங்கியிராவிட்டால் இக்கட்டிடமானது தற்போது இருக்கும் இடத்தில் இருந்திருக்கவே மாட்டாது.

யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியசாலையின் வளர்ச்சியில் அதிகம் அக்கறை கொண்டவராக அமரர் அவர்கள் வாழ்ந்து வந்தார். இப்பாடசாலையானது 1926ம் ஆண்டில் சைவப் பிள்ளைகளின் கல்விக்காக இந்து போட் இராசரத்தனத்தின் ஆதரவுடன் வளர்ச்சி கண்ட ஓர் பாடசாலையாகும். ஆரம்பத்தில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவிலுக்கு அருகாமையில் வாழ்ந்து வந்த முருகேச நாகலிங்கம் அவர்களது வீட்டிலே திண்ணைப்பள்ளிக்கூடமாக ஆரம்பித்து பின்னர் மயிலிஓடை என்னும் காணியில் அமையப் பெற்ற ஒன்றாகும். அமரர் அவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக பல அன்பர்களின் உதவியுடன் கட்டிடங்களை அமைத்துக் கொடுத்து உதவி வந்தவராவார். அவ்வாறு அவருக்கு உதவி புரிந்து வந்தவர்களில் அமரர்கள் சீ.க. சுப்பிரமணியம், மு. நல்லையா, க. மார்க்கண்டு, பொ. சதானந்தம் ஆகியோரும் மற்றும் அ. சங்கரப்பிள்ளை, இ. இராசரத்தினம் தி.சுப்பிரமணியம் ஆகியோரும் குறிப்பிடப்பட வேண்டும்.

இப்பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் இல்லாத குறையை நீக்குவதற்காக ஞானவைரவர் கோவிலுக்கு அருகாமையில் அமைந்திருந்த சிதம்பர புண்ணிய காணியை பெற்றுக் கொடுத்த பெருமையையும் இவரையே சாரும் தற்போது இம்மைதானம் ஸ்ரார் விளையாட்டு கழகத்தினரால் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது.

கோப்பாய் வடக்கில் 1954இல் மங்கையர் கழகம் அமைக்கப்பட்டு அதன் தலைவராக செல்வி ஞானமணி குணரத்தினம், காரியதரிசி றோசி இராசமலர் பொருளாளர் இராசநாயகி செல்லையா ஆகியோர் பதவி

வகித்தும் வந்தனர். இவர்கள் காலத்தில் நெசவுத் தொழில் ஆரம்பிக்கப்பட்டு 25 பெண்கள் வரையில் வேலைவாய்ப்பு பெற்று தொழில் புரிந்து வந்தனர். வேறும் தையல் வகுப்பு, பொம்மை செய்தல் போன்ற வகுப்புக்களும் நடைபெற்றது. 1958இல் நாட்டில் இனக்கலவரம் காரணமாக மங்கையர் கழகம் செயலிழந்து அதன் பின்னர் கிராம முன்னேற்ற சங்க மேற்பார்வையாளராக இருந்த அ. ஜெயரத்தினம் அவர்களத வழி நடத்தலினால் குறித்த கட்டிடத்தில் பாலர் பகல் விடுதி ஆரம்பித்து நடாத்தப்பட்டு வந்தது. இதன் தலைவராக அமரர் மகேஸ்வரி சுப்பிரமணியம் காரியதரிசி செல்வி க. அற்புதமலர் தனாதிகாரி, செல்வி. க. சிவஞானம் பதவி வகித்தனர்.

இப்பாலர் பாலர் விடுதியை நடாத்துவதில் பொரளாதாரக் கஸ்டங்களை மாதர் சங்கத்தினர் எதிர்நோக்கியதன் காரணமாக 28.06.1971இல் கோப்பாய் வடக்கு சமூகசேவா சங்கம் உதயமானது அதன் தலைவராக அமரர் குமாரசாமி அவர்கள் பதவி ஏற்று அமரத்துவம் அடையும் வரை பாலர் பகல் விடுதிக்காக புதிய காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு அதில் அரச உதவியுடன் புதிய கட்டிடமும் அமைக்கப்பட்டது. பாலர் பகல் விடுதியின் செயற்பாட்டுக்கு இவருக்க ஒத்துழைப்பு வழங்கி வந்தவர்களில் அமரர்கள் சீ. க. சுப்பிரமணியம், மு.நல்லையா, க. மார்க்கண்டு, செ. தம்பிஜயா, க. சின்னத்துரை, கு. அரசபிள்ளை ஆகியோர் குறிப்பிடப்பட வேண்டியவர்கள் ஆவார்.

அமரர் குமாரசுவாமி அவர்களது கூட்டுறவு மற்றும் வைத்தியசேவைகளில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய மேலும் சில முக்கிய தகவல்கள்.

அமரர் க. இ. குமாரசாமி அவர்கள் வலி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவராக இருந்த காலத்தில் கோப்பாய் வடக்கில் ஒரு கூட்டுறவு மாகாண கிராமிய வங்கியை பெற்றுத் தந்த பெருமைக்குரியவராவார். அத்துடன் அதற்கான ஒரு பாரிய கட்டிடத்தையும் அமைத்ததுடன் ஓர் மாதிரிக் கடையையும் அக் கட்டிடத்தில் இயங்கச்

செய்தார் கூட்டுறவு மாகாண கிராமிய வங்கி காரணமாக கிராம மக்கள் அடைந்த நன்மை அளப்பரியது. மேலும் கோப்பாய் வடக்கில் சந்திக்கருகாமையில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைக்கு காணியைப் பெற்று நிரந்தரக் கட்டிடத்தை அமைத்துக்கொடுத்தவரும் அவரே ஆவார். அவரது காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் கோப்பாய் வடக்கின் பல இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

க. இ. குமாரசுவாமி அவர்கள் கோப்பாய் வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளின் போது, கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி அதிபர் திரு.பூ. க. இராஜரத்தினம் அவர்கள் பின்னர் கிராமசபைத் தலைவராக பதவி வகித்தார். அவரது விஷேட உதவியையும், கிராம சபையின் விஷேட ஆணையாளராக பதவி வகித்த திரு. J.S.S. ஆனந்தம் அவர்களதும் ஆதரவையும் உதவியையும் வைத்திய சாலையின் அபிவிருத்திக்கு பெரிதும் திரு. க. இ. குமாரசுவாமி அவர்களால் பெரிதும் இணைக்கப்பட்டது. மேற்படி பெரியோர்கள் இருவரும் அபிவிருத்திப் பணிக்கு தமது ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தனர்.



அமரர்

**க. இ. குமாரசுவாமியும்**

**பாரியார் சரஸ்வதியும்**

**சுயசரிதையில் சில கூற்றுக்கள்:-**

நான் 30.06.2013இல் தற்போதிருக்கும் அப்பிளானை, கோப்பாய் வடக்கு எனும் முகவரியில் தான் பிறந்து, வளர்ந்தேன். எனது தந்தையார் க.இளையதம்பி அவர்கள் மலேசியாவில் அரச பணியாற்றியவர். அக்காலத்தில் பிரலபல சோதிடராகத் திகழ்ந்தார்.

1918இல் கோப்பாய் சி.எம்.எஸ்.பாடசாலையில் 02ஆம் வகுப்பில் சேர்ந்து 05ஆம் வகுப்பு வரை கல்வி கற்றேன்.

அப்போது பிரித்தானியர் இலங்கையை ஆண்டகாலம், ஆதலால் கூடுதலாக ஆரம்பக்கல்வி மிஷன் பாடசாலைகள் மூலமாகப் பெறப்பட்டது. இன்றும் எண்ணற்ற மிஷன் பாடசாலைகள் இயங்கி வருவதைக் காணலாம்.

எனது வகுப்பாசிரியரான திருமதி சின்னப்பா சின்னப்பிள்ளை 04ஆம் வகுப்பு வரை சிலேற், பென்சில் பாவித்துத் தான் கல்வி புகட்டினார். 05ஆம் வகுப்பில்தான் பென்சில், கொப்பி உபயோகிக்கும் வழக்கம் அக்காலத்திலிருந்து.

இக்கால மாணவருக்கு - இளைய சமுதாயத்தினருக்கு - “சிலேற்றை” தெரியும் என நான் நினைக்கவில்லை.

1924, 1925 ஆண்டுகளில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆங்கிலமொழி மூலமான கல்வியும், 1926 - 30 வரை கோப்பாய் அரசினர் சாதன பாடசாலையில் எஸ்.எஸ்.சீ. (இன்றைய O/L) வரையும் கல்வி பெற்றேன்.

எனது ஆசிரிய சேவையை 17வது வயதில் சரவணபவனானந்த வித்தியாசாலையில் ஆரம்பித்தேன்.

1932, 1933, ஆகிய ஆண்டுகளில் ஆசிரியப் பயிற்சியை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நிறைவு செய்தேன். எனது ஆசிரிய சேவையில் கோப்பாய், கொக்குவில், கல்வியங்காடு, உரும்பிராய், கைதடி ஆகிய பிரதேசப் பாடசாலைகளில் கற்பித்தேன்.

அத்துடன் கண்டி சென்பொஸ்கோ பாடசாலை, கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி ஆகியவற்றிலும் வெளிமாகாணப்பணியாக ஆசிரியராக இருந்தேன். ஈவினை விக்னேஸ்வரா வித்தியசாலை, கோப்பாய் சரவணபவனாந்த வித்தியாசாலை ஆகியவற்றில் தலைமை ஆசிரியராகப் (அதிபராக) பணி செய்துள்ளேன்.

நான் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய மாணவனாக இருந்தபோது தமிழகத்திலிருந்து திரு வி.க. எனப்படும் கல்யாண சுந்தர முதலியார் யாழ்ப்பாணம் வந்திருந்தார். வண்ணார் பண்ணையில் அவர் நிகழ்த்திய பிரசங்கத்திற்கு எனது ஆசான் மகாலிங்கசிவம் உபாத்தியாயர் சென்றிருந்தார். அவர் அங்கிருந்து வந்து என்னை அழைத்து வரவேற்பு பாக்கள் தந்தார்.

நான் அவற்றிலிருந்து பாவரிகளைத் தேர்ந்தெடுத்து 10 வரியில் வரவேற்புபா ஒன்றை உருவாக்கினேன். திரு வி.க. ஆசிரிய பயிற்சிக்கலாசாலைக்கு வந்தபோது வரவேற்புபா படித்தேன். அவர் உளம் மகிழ்ந்து பாராட்டியதையும் முதுகில் தட்டி வாழ்த்தியதும் என் புலன்கள் என்னை உணரும் இறுதிக்கணம் வரை நினைவில் வாழும்.

1946ஆம் அண்டில் நான் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க காரியதரிசியாக (செயலாளர்) இருந்தேன்.

அக்காலத்தில் தமிழ், சிங்கள மொழிகளில் கற்பிக்கும் ஆசிரியரை சுயமொழி ஆசிரியர் எனவும், ஆங்கில மொழியில் கற்பிப்போரை ஆங்கில மொழி ஆசிரியர் எனவும் அழைப்பது வழக்கம்.

ஆனால் பாடவிதானம், பரீட்சை வினாத்தாள் எல்லாம் ஒன்றாயிருந்தது.

1946இல் சம்பள விசாரணைச் சபையின் அறிக்கையின்படி புதிய சம்பள அளவுத்திட்டம் நடைமுறைக்கு இடப்பட்டது.

அதன்படி சுயமொழி ஆசிரியர்களுக்கு ஆரம்பச்சம்பளம் 69ரூபா ஆகவும், ஆங்கிலமொழி ஆசிரியர்களுக்கு 140ரூபா ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுப் பெரும் அநீதி இழைக்கப்பட்டிருந்தது.

சமவேலைக்கு சமசம்பளம் கோரி இலங்கை முழுவதும் சகல ஆசிரியர் சங்கங்களும் தொடர்போராட்டத்தை நடத்தின. வேறுபட்ட சம்பள அநீதியை எதிர்த்து 31.07.1947இல் கொழும்பு வித்தியாதிபதி கந்தோரில் ஒரு கூட்டமும் நடந்தது. அதில் ரம்புக்கனை (இரத்தினபுரி) தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் போன்ற தலைவர்களும் கலந்துகொண்டு நியாயத் தன்மைகளை விளக்கினர்.

அப்போதைய ஆங்கிலேயர் ஆட்சியில் வித்தியாபதியாக இருந்த மைக்கிறே எனும் பிரித்தானியர் எமது கோரிக்கையை ஏற்று அடுத்த நாளாகிய 01.08.1947 முதல் சகலருக்கும் 140ரூபா என்ற சம்பள அளவுத்திட்டத்தை வழங்கினார்.

கோப்பாய் வடக்கு வாலிபர் சங்கத்தை 1940இல் இவ்வூர் இளைஞர்களுடன் சேர்ந்து உருவாக்கினேன்.

அக்கால கூட்டுறவு முன்னோடிகளான மாதகல் தம்பா, இடைக்காடு தம்பி முத்து, நீர்வேலி செ.நடராசா ஆசிரியர் ஆகியோரின் வழிகாட்டலைப் பெற்று 23.10.1940இல் கோப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தை உருவாக்கினேன். இச்சங்கத்தின் மூலம் அங்கத்தவர்களுக்கும்

றலிசைக்கிள் 100 ரூபாவிற்கு கடன் அடிப்படையில் பெற்றுக் கொடுத்தோம்.

இதுபோன்ற கூட்டுறவு அமைப்புக்கள் அக்காலத்தில் குடாநாடு எங்கும் தோற்றம் பெற்றன. அப்போது நடைபெற்ற 2ஆம் உலகப்போரில் ஏற்பட்ட உணவுப் பங்கீட்டிற்கு இவை பெரிதும் உதவியது.

நான் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் மாணவராயிருந்த போது சித்திர ஆசான் S.R.கனகசபை அவர்களின் உதவியுடன் "வின்சர் ஆர்ட்கிளப்" எனும் அமைப்பை உருவாக்கினேன்.

எனது ஆசிரியப்பணி காலத்திலேயே பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், இளஞ்சைவப்புலவர் ஆகிய தேர்வுகளை நிறைவு செய்தேன். அரவிந்தவாசம் எனும் பெயரிலான பதிப்பகம் மூலம் கோவைக் கிழார் க.இ.குமாரசாமி எனும் பெயரில் நூல் வெளியீட்டுப் பணியைச் செய்து வருகின்றேன்.

இவர் 1998ஆம் ஆண்டு கோப்பாய் வரலாறு கூட்டுறவு, 1999இல் கண்ணகி சரிதை வரலாறு, 2005இல் இரு நூல்கள், இலங்கையில் கற்புடை மாதர் வழிபாடு, யாழ் தமிழரும் இந்துமத வழிபாடுகளும் ஆகிய நூல்களே வெளியிடப்பட்டவை. தற்போது அவரது சுயசரிதை நூல், இலங்கை சரிதம், சுக ஆதாரங்கள் ஆகிய நூல்கள் வெளியிடும் தறுவாயில் உள்ளன.

பிறர்க்கென வாழும் வாழ்வின் நிறைவு எம்மை நிறைவாக உயர்வாக வாழவைக்கும் என்ற உண்மையின் ஒளியை இவரது சந்ததிகளில் இன்னமும் காண முடிகின்றது.

# தமிழ் ஆசிரியர்களுக்குச் சம சம்பளம் கேட்டு போராடி வெற்றிகண்ட மூத்த தொழிற்சங்கவாதி

**(மறுபிரசுரம் - பின்னிணைப்பு உதயன் பத்திரிகையில் இருந்து பெறப்பட்டது)**

கேள்வி: உங்களது ஆசிரிய கலாசாலை பயிற்சி பற்றிக் கூறுங்கள்?

பதில்: நான் 17ஆவது வயதில் ஆிசிரியர் சேவையில் சேர்ந்து கோப்பாய் சரவணானந்தா வித்தியாலயத்தில் ஒரு வருடம் பணியாற்றிய பின் 1932-1934ஆம் வருட காலப்பகுதியிலே கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றேன். அப்போது அதிபராக ஏ.பொன்னையா இருந்தார். பண்டிதர் ம.வே.மகாலிங்கசிவம் இலக்கியம், இலக்கணம் இரண்டையும் கற்பித்தார். எஸ்.ஆர்.கனகசபை சித்திரம் கற்பித்தார். உடுவில் கே.முருகேசு, மட்டக்களப்பு வைரமுத்து ஆகியோரும் விரிவுரையாளர்களாக இருந்தனர்.

கேள்வி: எந்தெந்தப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக இருக்கிறீர்கள்?

பதில்: இருபாலை அரசினர் சாதனா பாடசாலை, சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை, கொக்குவில் நாமகள் வித்தியாசாலை, செங்குந்தா இந்துக் கல்லூரி என்பவற்றில் கற்பித்திருக்கிறேன். கோப்பாய் சரவணானந்தா வித்தியாசாலையிலே ஆசிரியராகவும், பின்னர் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளேன்.

கேள்வி: ஆசிரிய சங்கங்களில் உங்களிற்கு எவ்வாறு ஈடுபாடு ஏற்பட்டது?

பதில்: எனக்கு இழைக்கப்பட்ட ஓர் அநீதி தான் அதற்குக் காரணம். அரசாங்க சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படு வதற்காக எமது அதிபராக முன்னர் இருந்த கே. பொன்னையாவும், சேர். பொன். இராமநாதனின் மருமகனான சு. நடேசப்பிள்ளையும் போட்டியிட்டனர். அவ்வேளை பழைய மாணவர்களாகிய எங்களை அழைத்த பண்டிதர் மகாலிங்சிவம் எம்மை பொன்னையா அவர்களை

ஆதரிக்கம்படி கேட்டுக்கொண்டார். நாமும் அவருக்கு ஆதரவாக பிரசாரம் செய்தோம். அப்போது கல்வி அதிகாரியாக இருந்த தியாகராஜா என்னை அழைத்து நடேசப் பிள்ளையை ஆதரிக்கம் படி வற்புறுத்தினார். நான் மறுத்ததற்கு பழிவாங்கலாக 3 மாதத்துள் என்னை பரிசோதிக்க வந்தார். நான் கற்பிக்காத பகுதிகளில் பிள்ளைகளிடம் கேள்வி கேட்டுவிட்டு, "திருப்திகரமற்றது" என்று எழுதி எனது சம்பள ஏற்றத்தை நிறுத்தினார். இதற்குத் தீர்வு காண்பதற்காக 1940இல் வலிகாமம் கிழக்கு தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டேன்.

கேள்வி : வலி. கிழக்கு தமிழாசிரியர் சங்கம் எவ்வாறு அகில இலங்கை தமிழாசிரியர் சங்கமாக வளர்ச்சியடைந்தது?

பதில்: வலி. கிழக்குச் சங்கத்தை அடுத்து நானும் எனது ஆசிரிய நண்பர்களும் இணைந்து வட இல்கைத் தமிழாசிரியர் சங்கத்தை உருவாக்கினோம். இதைப் பின் பற்றி என்னுடன் கலாசாலையிற் கற்ற சிவனேசராசா கிழக்கிலங்கை தமிழாசிரியர் சங்கத்தையும் எனது உறவினர் ஒருவர் மேல் மாகாணத் தமிழாசரியர் சங்கத்தை உருவாக்கினர். அடுத்து இந்த மூன்றையும் இணைத்து அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தை உருவாக்கினோம்.

**சமவேலைக்குச் சம சம்பளம்**

கேள்வி : அ. இ. தமிழாசிரியர் சங்கம் மூலம் நீங்கள் மேற்கொண்ட முக்கியமான பணி எது?

பதில் : நான் கற்பித்த காலத்திலே தமிழாசிரியர்களுக்கு ஆரம்பச் சம்பளம் 48 ரூபாவாகவும் இறுதி எல்லை 120 ரூபாவாகவும் இருந்தது. ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆரம்பமே 120 ரூபாவாக இருந்தது. இதை எதிர்த்து "சம வேலைக்குச் சம சம்பளம்" என்ற கோரிக்கையை முன் வைத்து லங்கா ஜாதிய குருசங்கம, ராஜ்ஜிய குரு சங்கம என்பவற்றடன் இணைந்து போராடி அனைவருக்கும் சம சம்பளம் பெற்றுக் கொடுத்தமை தான் முக்கிய பணியாகும்.

கேள்வி : கூட்டுறவுத்துறையில் எவ்வாறு உங்களுக்கு ஈடுபாடு ஏற்பட்டது?

பதில் : இரண்டாம் உலக மகாயுத்த காலத்திலே உணவுத்

தட்டுப்பாடு ஏற்பட்டது. கிடைக்கும் உணவைப் பகிர்ந்து கொடுக்க நாடெங்கும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உருவாக்கப்பட்டன. இச் சூழலில் நானும் வேறு சிலரும் இணைந்து கோப்பாய் ஐக்கிய பண்டக சாலையை உருவாக்கி, நான் அதன் தலைவராகச் செயற்பட்டேன். வலி. கிழக்கில் எருவாக்கிய முதற் பண்டகசாலை இது தான். பின்னர் நானும், நீர்வேலி சே. நடராஜா ஆசிரியரும் இணைந்து வலி. கிழக்கு ஐக்கிய பண்டகசாலைகளின் சமாசத்தை உருவாக்கினோம். இதனையடுத்து யாழ். றீகல் தியேட்டரில் நடந்த யாழ்ப்பாணத்திலுள்ள பண்டகசாலைகளின் சமாசக் கூட்டத்தில் எனது பிரேரணை மூலம் வட இலங்கைப் பண்டகசாலைகளின் சமாசம் உருவாக்கப்பட்டது. நான் அதன் செயலாளராகவும் இருந்திருக்கின்றேன். இருபது வருடங்கள் வரை நான் கூட்டுறவுத்துறையிற் பணியாற்றியிருக்கிறேன்.

கேள்வி : உங்களால் வெளியிடப்பட்ட நூல்கள் எத்தகைய கருப்பொருள்களைய் கொண்டுள்ளன?

பதில் : எனது, "கோப்பாய் வரலாறு - கூட்டுறவு" என்னும் நூல் கோப்பாய்ப் பிரதேசம் பற்றிய முழுமையான தகவல்களைத் தொகுத்துத் தரும் ஆவணம். "யாழ், தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்றுள்ள நோர்வே, சுவிஸ், ஜேர்மனி, யாவா, இந்தோனேசியா முதலிய நாடுகளிலுள்ள இந்த மத வழிபாடுகள் பற்றிய தகவற் களஞ்சியம். "கண்ணகி கதையையம், ஈழத்திலே கண்ணகி வழிபாடு நடைபெறும் ஆலயங்களையும் பற்றிய விவரணம்.

**மறக்கமுடியாத சம்பவம்**

கேள்வி : உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மறக்கமுடியாத சம்பவமாக எதனைக் கருதுகிறீர்கள்?

பதில் : நான் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்ற போது தமிழக அறிஞரான வி. கலியாண சுந்தர முதலியார் (திரு. வி.க) யாழ்ப்பாணம் வந்திருந்தார். யாழ்ப்பாணத்தில் அவருக்கு நடந்த வரவேற்புக் கூட்டத்திற்குச் சென்ற மகாலிங்கம் ஐயா என்னிடம் வந்து "திரு. வி. க. இன்னும் சற்று நேரத்தில் இங்கு வருவார். நீர் வரவேற்புரை கூறும்" எனச் சொல்லி இங்கு கொடுக்கப்பட்ட துண்டுப்

பிரசுரங்களையும் தந்தார். நான் அவற்றில் இடம்பெற்ற விடயங்களையும் சேர்த்து வரவேற்புரை கூறினேன். சபையிற் பெரும் ஆதரவாம். "யான் இங்கே வருவேன் என்பது உமக்கு எவ்வாறு தெரியும்? எனக் கேட்டு திரு.வி.க. என்னை ஆசீர்வதித்தமையே மறக்கமுடியாத சம்பவமாகும்.

கேள்வி : நீங்கள் பெற்ற விருதுகள் எவை?

பதில் : நான் ஓவியம் வரைவதிலும் ஈடுபட்டேன். இளம் வயதில் வீடுகளில் வைக்கும் சுவாமிப் படங்களை வரைந்து கொடுக்கும் பணியையும் மேற்கொண்டேன். எனது ஓவியத்துறை ஆசிரியரான எஸ். ஆர். கனகசபை எனக்கு கற்புடை மாதர் வழிபாடு என்னும் நூல் வெளியீட்டின் போது "கோவைக்கிழார்" என்னும் பட்டமும் வழங்கப்பட்டது.

**பிரசுரம் 4.05.2008 உதயன் பத்திரிகை**

நூல்கள் அறிவாற்றலின் அழகிய செல்வங்கள்

**- கோதைன் ஸ்விப்ட் -**

# கோப்பாய் வடக்கு சிவபூமி

## (மறுபிரசுரம் - பின்னிணைப்பு கோப்பாய் வரலாறு நூலில் இருந்து பெறப்பட்டது)

சபாபதி நாவலர் அவர்களால் சைவபூமி என அழைக்கப்பட்ட (கைதடி - மானிப்பாய் வீதி, உப்பாறு நீர்வேலி, உரும்பிராய் இடைப்பட்ட இன்றைய) கோப்பாய் வடக்கு இன்றும் சைவ பூமியாகவேயுள்ளது.

வராம் பத்தையின் தெற்குப்புறமாய் பிராமணக் குடியிருப்புக்கள் நெருக்கமாயிருந்தன. அவர்கள் சிவபூசை வழிபாடு செய்வதற்கு வசதியாக தங்கள் மத்தியில் ஆலயங்களை நிறுவினர். இந்தவகையில் கேணியடி வைரவர், செல்வ விநாயகர், மகிழடி உக்கிர வைரவர், மிதியத்தனை மற்றும் ஆலயங்கள் அமைந்துள்ளன. மிதியத்தனை வைரவ கோயில் பூசகராயிருந்த கார்த்திகேயக் குருக்கள் அவர்கள் மகன் சிறந்த புராண படன உரைகாரரும் சிவப் பொலிவும் உடையவராயிருந்து பிற்காலத்தில் மலாயா சென்று சைவமும், தமிழும் வளர்த்த ஐயாத்துரைக் குருக்கள் அவர் சகோதரர் சுப்பையாக் குருக்கள் என்போர் சந்ததியினரும் மகிழடி உக்கிர வைரவர் கோயில் பூசகர் சிவகடாட்சக் குருக்கள், மகன் முத்துச்சாமிக் குருக்கள் , மருகர் நொத்தாரிசு கெங்காதர ஐயர் விஷகடி வைத்தியர் அப்பையர், நல்லூர் பிரதம பூசகராயிருந்தவரும் சைவ மக்கள் பலராலும் அறியப்பட்டவருமாகிய முத்துக்குருக்கள், அவர் தந்தை வைரவநாதக் குருக்கள் வழி வந்தவர்கள் யாவரும் இச் சுற்றாடலில் வசித்தவர்களாவர்., இதன் பக்கத்தேயுள்ள குறிச்சி இன்றும் பிராமணரோடை என்றேயழைக்கப்படுகிறது.

ஊரியாட்டி எனும் காணியில் அம்பலம்வேலர் வேல்தாபித்து வழிபட்டு வந்த போது தான் கண்ட கனவைக்கூறி உந்துவத்தை எனும் காணியில் இன்றைய சித்திரவேலாயுத சுவாமி கோயில் தாபிக்க காலாயிருந்தவரும், இன்றைய இராதம்பு கிணற்றடியின் வடபுறமாய் இன்றும் அம்மா வளவு என அழைக்கப்படும் காணியில் குடியிருந்தவருமாகிய வேதக் குட்டிக்குருள்ளளும், நமதூர்ப் பேரறிஞர் அ.

வி. மயில்வாகனம் அவர்களது சமஷ்கிருதக்குருவான மதுரை ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் அவர்களும், யாழ்ப்பாணத்தில் ஆடி அமாவாசையில் நீராடிப் பிதிர்க்கடன் செய்யும் கீரிமலை போன்று - இராமபிரான் இலங்கை வந்த போது வில்லூண்டித் தோண்டியதாகச் சொல்லப்படும் - மட்டக்களப்பில் பிரசித்தி பெற்ற மாமாங்கம் தீர்த்தக்குளத்தடி பிள்ளையார் ஆலய பரம்பரைப் பூசகர்கள் இரத்தினக் குருக்கள் அவர்களும் அவர் மகன் அண்மையில் காலஞ்சென்ற பூரணானந்தக் குருக்கள் அவர்கள் முதலிய பிராமயோத்தமர்கள் ஒழுக்க சீலர்களாயிருந்து சைவம் வளர்த்த பூமியிது.

சபாபதி நாவலர் அவர்களும், அவர்களுக்குப் பின் திண்ணைப் பாடசாலை அமைத்து நிகண்டு இலக்கியம் புராணம் என்பன கற்பித்த முருகேசு உபாத்தியாயர், சிறந்த சைவ ஒழுக்க சீலரும் உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆங்கில ஆசானாயிருந்து எத்தனையோ பிரசித்தமான மாணவ மணிகளைத் தோற்றுவித்தவரும், எமதூரில் சைவமும், தமிழும் வளர்க்கத் தன்னையே அர்ப்பணித்துச் சேவையாற்றியவருமாகிய மு. நாகலிங்கம் ஆசிரியர் அவர்களும் பிறந்து வளர்ந்து அருஞ் சேவையாற்றிய பூமியிது.

சரவணபவானந்த வித்தியசாலைக்குரிய காணி தரும சாதனம் செய்த மூவரில் சின்னத்தம்பி பொன்னையாவினோடு சேர்ந்த முருகர் கந்தர், சின்னத்தம்பி மார்க்கண்டு என்பவர்களும் மேலும் வித்தியாசாலை விஷ்தரிப்பிற்கான காணியளித்த நாகலிங்கம் அம்பலவாணர் ஆசிரியர் அவர்களும், கோப்பாய் வடக்கு மாதர் சங்கம், பாலர் விடுதி என்பவற்றிற்கு வேண்டிய காணி நன்கொடையளித்த சீனிவாசம் கந்தையா அவர்களும் கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு தாமாகவே முன்வந்து மூன்று ஏக்கர் காணியைத் தரும சாதனஞ் செய்த ஆறுமுகம் நாகமுத்து, சங்கரப்பிள்ளை கந்தப்பிள்ளை, உடன் வைரமுத்து அம்பலவாணர் வைரமுத்து ஆறுமுகம் என்பர்களும் சித்திர வேலாயுத சுவாமி கோயில் ஆறுமுகசுவாமி விக்கிரம் தாபித்ததனோடு பிரதி வருடமும் ஸ்தாபித்த நாள் விழாவிற்கான ஒழுங்குகள் செய்த இராமு சின்னத்தம்பி ஆகிய தர்மசீலர்கள் வாழ்ந்த பூமியிது.

கோப்பாய் விவசாயிகள் சங்கக் கட்டிடம் அத்திவாரமிட யாவும் செய்யப்பட்டு குளம்பிய நிலையில் செய்வதறியாது தத்தளித்த போது தாமாக முன்வந்து வேண்டிய 8 பரப்பு 15 குழி காணியை நன்கொடையளித்த திருவாளர்கள் சு. கந்தப்பிள்ளை, வ. சின்னப்பா, சி. வல்லிபுரம் , சி. சுப்பிரமணியம், திருமதி அ. கதரவேலு ஆகிய பேரன்பர்கள் அவதரித்த பூமியிது. கோப்பாயில் வந்து குடிகொண்ட நாராயண பக்தரான சாமியார் ஓர் ஆலயம் நிறுவ விண்ணப்பித்த போது தமதுரிமையான கொழுவியன் கலட்டியில் வேண்டிய காணியைத் தருமசாதனம் செய்த வீரவாகு வேலுப்பிள்ளை, சதாசிவம் சிவக்கொழுந்து, கந்தையா பொன்னம்பலம், சின்னத்தம்பி இராசையா, மயில்வாகனம் கந்தையா, திருமதி சின்னையா இராசம்மா, பங்காளர்கள் பக்திமான்கள் வாழ்நத பூமியிது.

மலாயா சென்று வைத்தியத்துறையில் அருஞ்சேவையாற்றி ஓய்வு பெற்று இவ்விடம் திரும்பிய போது சரவணபவானந்த வித்தியாசாலைக்குப் போதிய இடவசதியில்லாத நெருக்கடி ஏற்பட்ட போது 80 X 20 அடி கொண்ட கிழக்குக் கட்டிடத்தைத் தமது செலவிலேயே நிறுவிக் கொடுத்தவரும், கோப்பாய் வடக்கு மாதர் ச்கம் நெசவு மின்தறிநிலையமமைக்க ஆரம்பித்த கட்டிடக் கொட்டகை வேலை முழுவதனையும் செய்ய நிதியுதவியளித்தவரும், கந்தசாமி கோயில் வெளி மண்டபக் கூரை வேலைக்கு வேண்டிய நிதியுதவி செய்தவரும், பிரயாணத்திற்கு உகந்த காலமல்ல என்ற அவரது சோதிடர் தடுத்த போதும் பிள்ளைகளின் வற்புறுத்தல் அழைப்பின் பேரில் மலாயா சென்ற போது விமானத்தில் பிரிய நேரிட்ட தரும சீலர் டாக்டர் சி. பொன்னையா அவர்களும்,

கோப்பாய் சித்திர வேலாயுத சுவாமி கோயில் தேர்த் திருப்பணிச் சபைத் தலைவராயிருந்த தேர் வேலைகளைப் பூர்த்தி செய்து தேரோட வைத்தவரும், யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு நீதிமன்றங்களிலும் வருடக்கணக்கில் நடைபெற்ற விசாணைக்கெல்லாம் தலைமை தாங்கி நின்று தனது நேரத்தையும் பணத்தையும் செலவளித்தவரும் கோட்டாரின் தீர்ப்பின் படி ஸ்தாபிக்கப்பட்ட பலானை கண்ணகையம்மன் கோயில்

பரிபாலன சபைக்கு முதல் தலைவராயிருந்து வேண்டிய திருப்பணி வேலைகளைத் திட்டமிட்டுச் செய்தவரும் இணக்கச் சபையில் ஆரம்பத் தலைவருமாயிருந்தவரும் வடக்கு கிழக்கு மாகாண தபால் அத்தியட்சகருமாயிருந்து ஓய்வுபெற்றவருமாகிய மு. பரமலிங்கம் அவர்கள்.

ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் திருப்பணிச் சபை, மற்றும் சமூக சேவா சங்கம், கி.மு. சங்கம், சனசமூக நிலையம் முதலிய பொதுஸ்தாபனங்களின் பிரதான நிர்வாகியாகவிருந்து சேவையாற்றி அன்பர் என நண்பர்களால் அழைக்கப்பட்ட சீ. க. சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்கள்:

கோப்பாய் வடக்கு சமூக சேவா சங்கச் செயலாளராகவிருந்த போது இராசவீதி மின்சாரம் கிடைப்பதற்கு பெருமுயற்சி செய்து ஆரம்பித்தினத்தன்று பொறியியலாளர் சிவதாசன் அவர்களால் பாராட்டப் பெற்றவரும், குண்டடிபட்ட பாலர் விடுதியை கட்டியமைக்க அன்பருடன் சேர்ந்து பெருஞ் சேவையாற்றியவரும் 1987-ல் அகதியாக வெளியேறியபோதும், வந்து சரவணபவானந்த வெள்ளிவிழா மலர், மற்றும் பாடசாலைக் கோவைகளை எடுத்துப் பத்திரப் படுத்தி வைத்துத் திரும்பும் போது அகால மரணமடைய நேரிட்ட மு. நல்லையா அதிபர் அவர்கள் போன்ற சமூக நலன்விரும்பிகள் வாழ்ந்து அருஞ்சேவையாற்றிய பூமியிது.


சித்திர வேலாயுத சுவாமி கோயில் முதல் பரிபாலன சபையில் மானேசராயிருந்த கந்தர் விநாசித்தம்பி, தொடர்ந்து அப்பதவியை வகித்த அம்பலவாணர் கார்த்திகேசு அவர் தம்பி சீனிவாசம் பலானை கண்ணகை பரிபாலன சபையின் முதல் மானேசரராயிருந்தவரும் குளிர்த்தி தண்டலுக்குச் சிவலையர் வெளிக்கிட்டு விட்டார் - மழை வரப் போகுது - என்று சொன்னவர்கள் வாக்குப் பொய்யாது. கண்ணகைத் தாய் அருள் மழை சொரிந்து மெய்ப்பிக்க நடந்த பக்தரான முருகேசு வைரமுத்து இவர்களும் தொடர்ந்து திருப்பணிகள் ஆற்றிய தப்பு சுப்பிரமணியம் அவர்களும், நமது ஆலயம் என்றும் தொடர்ந்து கண்ணகையம்மன்

ஆலயமாகவே இருக்க வேண்டும் - என்று சொல்லாலும், செயலாலும் நிலைநாட்டிய வீரவாகு கந்தையா அவர்களும்:

கோப்பாய் கிறீஷ்தவ கல்லூரி தமிழ்ப் பேராசானாயிருந்து மேற்றர வகுப்பு மாணவர்கட்கு சாயந்தர வேளைகளில் விடுதலை நாட்களிலும் வகுப்புக்கள் நடத்தி முழுச்சித்தி பெற வைத்து, பல மாணவமணிகளை உருவாக்கியவரும், ஞான பண்டித சைவ இளைஞர் சங்கம் ஸ்தாபித்து நமது கிராம மாணவரிடையே தமிழ், சமயம் சம்பந்தப்பட்ட பல போட்டிகள் வைத்து மாணவர் முன்னேற்றறத் திற்குப் பெருந்தொண்டாற்றிய பண்டிதர் சி. கந்தையா அவர்களும், நமது கிராம வித்தியாசாலையில் தலைமையாசானாயிருந்து பெருஞ் சேவை யாற்றியதனோடு கோலாட்டம் சீனடி சிலம்படி கவியியற்றல் சிவராத்திரி நாடகம் முதலிய நுண்கலைகளை வளர்த்து மாணவ உலகாலும் வித்தியா பகுதியாராலும் பாராட்டப் பெற்ற குருமணி வே. சிதம்பரப்பிள்ளை போன்ற அறிஞர்கள் அருஞ் சேவையாற்றிய இடமிது.

கோப்பாய் வடக்கிலுள்ள கோயில்கள், வித்தியாசாலைகள், சனசமூக நிலையங்கள் வைத்தியசாலைகள், அமைத்த இடப்பரப்பு முழுவதும் தர்ம சீலர்களால் நன்கொடையளிக்கப்பட்ட காணிகளிலேயே ஸ்தாபிதமாகியுள்ளமை இக்கிராம மக்களின் தார்மீக கொள்கைக்கு ஓர் எடுத்துக் காட்டாய் விளங்குகிறதெனலாம்.

இவ்வாறு பிராமணோத்தமர்கள் சிவபூசகர்கள் தர்ம சீலர்கள் சீருப்பணித் தொண்டர்கள் நல்லறிஞர்கள் வாழ்ந்து வழிகாட்டிய மகிமையினாலோ - அவர்கள் ஆன்ம வழிகாட்டலாலோ தெய்வத் திருவருளினால் இன்றைய கோப்பாய் வடக்கு இடப்பரப்பிலுள்ள பெரிய சிறிய கோயில்கள் அனைத்தும் சைவக் கோயில்களாகவே மிளிர்கின்றன. இன்றும் இவ்விடப் பரப்பில் வசிக்கின்ற 787 குடும்பங்களைச் சேர்ந்த 2481 பேரில் ஒன்று தவிர மற்றனைவரும் சைவர்களாகவே மிளிர்கின்றமை இப்பூமிக் குண்டு சபாபதி நாவலர் வாய்வந்த சைவபூமி இன்றும் சிவபூமியாகவே மிளிர்கின்றது.



அமரர் க.இ. குமாரசுவாமி குடும்பத்தவர்கள், 2 வது புதல்வியின் திருமணத்தின் போது

# கோப்பாய் வடக்கு பாலர் விடுதியும் சமூக சேவாசங்கமும்

**(மறு பிரசுரம் பின்னிணைப்பு கோப்பாய் வரலாற்று நூலில் இருந்து பெறப்பட்டது)**

கோப்பாய் வடக்கு மங்கையர் கழகம் 1954 - ல் ஆரம்பமானது
தலைவர் - செல்வி குணரத்தினம் ஞானமணி
காரியதரிசி - றோசி இராசமலர்
தனாதிகாரி - இராசநாயகி செல்லையா

என்போரைப் பிரதான நிர்வாகிகளாக 9 பேர் கொண்ட நிர்வாக சபை செயலாற்றியது. சீனிவாசம் கந்தையாவும் பெண் இலட்சுமிப் பிள்ளையும் நன்கொடையளித்த காணியில் ஓர் தற்காலிக கட்டிடம் நிறுவி தையல் வேலை பொம்மை செய்தல் பீடி வேலை என்பன தொடங்கி பல பெண்பிள்ளைகட்கு வேலை வாய்ப்பளித்தனர். கூட்டங்களும் பொருட்காட்சிகளும் வைத்து மங்கையர் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உழைத்தனர். குறித்த காணியில் 70' X 20' கொண்ட நிலையான கட்டிடமும் காரியாலயமும் அமைத்து மேலும் 15 நெசவு கைத்தறிகள் கொண்ட உற்பத்திப் பொருட்கள் சிறு கைத்தொழில் இலாகா கந்தவனம் அவர்கள் உதவியுடன் உடனுக்குடன் விற்பனையாகின நெசவுப் பொருட்களுக்கு உள்ளூரிலேயே கிராக்கி.

அக்காலத்தில் அரச ஆதரவுடன் மின் தறியமைக்கும் திட்டமிருந்தது. குறித்த காணியில் யாழ், மாநகரசபைப் பொறியியலாளர் சி. கனகராசா (கோப்பாய்) அவர்கள் திட்டமிட்டபடி மலாயா பென்சனியர் சி. பொன்னையா அவர்கள் முதலுதவியும் மேலும் மலாயா அன்பர்கள் உதவி, ஊரவர் உதவியுடன் 80 X 25 அடி கொண்ட கட்டிடம் விரைவில் நிறுவப்பட்டது. மின் தறியமைக்கும் முயற்சிகள் விரைந்து நடைபெற்றன. எதிர்பாராத விதமாக 1957- ல் ஏற்பட்ட பெரும் புயல் மழையின் போது புதிய கட்டிடத்தின் கூரை தூக்கி வீசப்பட்டு கட்டிடமும் பெருஞ் சேதமடைந்தது.

இதே வேளை 1958ல் வகுப்புக் கலவரத்தின் போது அநுராதபரியில் பெருஞ் செல்வாக்குடன் வாழ்ந்த இ. இராமலிங்கம் அவர்கள் அகதியாக கோப்பாய் வந்து ஓர் வியாபார நிலையத்தை நன்கு நடத்தினார். சி. பொன்னையா அவர்கள் மீண்டும் செய்த பேருதவியுடன், மேலும் அவர் மூலம் மலாயா அன்பர்களிடமும் ஊரவர்களிடமும் சேர்த்த பண உதவி கொண்டு இ. இராமலிங்கம் அவர்கள் பெருமுயற்ச்சியில் குறித்த கட்டிடம் ஓரளவு திருத்தியமைக்கப்பட்டது இதே வேளை புதிய மின் தறியமைக்கும் திட்டம் கூட்டுறவுச் சமாசங்களிடமே கொடுக்கப்படும் என அரசின் கொள்கை மாறியது. இது மங்கையர் கழகத்தாரை உற்சாகமளிக்கச் செய்தது. கட்டிடம் சில காலம் செயலற்றிருந்தது. 1963 காலப்பகதியில் திருமதி ம. சுப்பிரமணியம் - தலைவர், உப தலைவர் திருமதி அ.ஜெயரத்தினம் காரியதரிசி செல்வி க. அற்புதமலர் தனாதிகாரி செல்வி ச. சிவஞானம் என்போர் உள்ளிட்ட மாதர் சங்க நிர்வாகிகள் தெரிவாகினர். முன்னைய வேலைகள் பழைய கட்டிடத்தில் தொடர்ந்து நடைபெற்றன. புதிய கட்டிடத்தில் வேறு ஏதாவது தொடங்கி நடத்த யோசித்தனர். அக்காலகட்டத்தில் கி.மு ச மேற்பார்வையாளராகவிருந்த அ. ஜெயரத்தினம் அவர்களது வழி நடத்தலால் குறித்த கட்டிடத்தில் அக் கால அரச கொள்கைக்கு இணங்க பாலர் விடுதி நடத்தத் திட்டமிடப்பட்டு அரச அங்கீகாரமும் பெறப்பட்டது. பாடசாலை செல்லும் வயதடையாத 3 - 5 வயதுடைய பாலர் 75 பேர் வரை சேர்க்கப்பட்டு திருமதி மேதர் அவர்கள் பிரதம மேற்பார்வையில் நன்கு நடைபெற்றது. மேலதிகாரிகளது பாராட்டையும் பெற்றது. மாதர் சங்கத்தார் எவ்வித குறைபாடுமின்றித் தொடர்ந்து நடத்தினர். இந்த வகையில் கோப்பாய், நீர்வேலி குரநகர், பாசையூர் ஆகிய நான்கு இடங்களிலும் மாத்திரமே தான் பாலர் விடுதிகள் பெற்றோர் பாதுகாவலன் பிள்ளைகளை இன்று வரை கொண்டு வந்து நிலையத்தில் சேர்ப்பர்கள். தேநீர் உதவி நிலையங்களால் வழங்கும் போஷாக் குணவு, மதிய போசனம் என்பன கொடுக்கப்பட்டு, சீருடையும் வழங்கப்பட்டு நன்கு நடைபெற்றது. அரசாங்கம் ஒரு பாலருக்கு 10 ரூபா வீதம் உதவிப்பணம், வழங்கியது மேற்கொண்டு அங்கத்தவர்கள் உதவிப்பணம் விழாக்கள் வைத்து பிரவேசப் பணம் மூலம் திரட்டும் நிதி, என்பனவும் சேர்த்து நடத்தப்பட்டது. 1, 4, 69ல் உதவியரசாங்க அதிபர்

சபாரத்தினம் சிறுவர் பராமரிப்பு நிலைய அதிகாரி சிவசிதம்பரம் என்போர் வந்து பார்வையிட்டுப் பாராட்டுத் தெரிவித்தனர். பிரதி வருடமும் போதிய பாலர் வந்து சேர்ந்தனர். நிதி நிலைமை காரணமாக 50 பாலர் வரை மாத்திரமே சேர்க்க மட்டுப்படுத்தப்பட்டது. பொருட்களின் விலையேற்றத்தால் வரவின் மிஞ்சிய செலவு ஏற்பட்டது. உதவிப் பணத்தை கூட்டித் தருமாறு எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை. குறித்த மாதர் சங்கத்துக்கு உதவியாக ஓர் உபசபையும் தெரிவு செய்யப்பட்டது. இதே நேரத்தில் பராமரிப்பாளர் இராமலிங்கம் அவர்கள் நிலையத்தை விட்டு வெளியேறினார். மாதர் சங்கமும் உப சபையும் தொடர்ந்து நடத்தியது. வராமலிருந்த 3 மாத உதவிப்பணமும் வந்து சேர்ந்தது. இதில் ஒரு மாதப் பணத்தை அடுத்து வரும் செலவுக்காக வைத்துக் கொண்டு மிகுதியை இராமலிங்கம் அவர்களுடைய முற்பணத்துக்குக் கொடுக்க முற்பட்ட போது பிணக்கொன்று உண்டானது. செ. நடேசன் மூலம் இணக்கஞ் செய்து அவருடைய முழுக்காசும் கொடுக்கப்பட்டு சீர் செய்யப்பட்டது. திருவாளர்கள் வ. கந்தப்பிள்ளை, மு. நல்லையா, சீ. க. சுப்பிரமணியம், க.இ.குமாரசுவாமி, அ.ஜெயரத்தினம் என்போரால் முற்பணம் உதவப்பட்டு தொடர்ந்து தொய்வேறபடாது சீராக நடத்தப்பட்டது. மாதர் சங்கத்தார் மனந்தளர்ந்த நிலையில் திரு. அ. ஜெயரத்தினம்அவர்களது பகீரத முயற்சயால் 28, 6 71 திங்கள் 3 மணிக்கு சரவணபவானந்த வித்தியாசாலையில் பெற்றார் பல்வேறு சங்கப் பிரதிநிதிகள் அன்பர்கள் சேர்ந்த பொதுக் கூட்டத்தில் கோப்பாய் வடக்கு சமூக சேவாசங்கம் உதயமானது.

அதன்

| | |
|---|---|
| தலைவர் | க. இ. குமாரசாமி |
| உபதலைவர் | அ. ஜெயரத்தினம் |
| காரியதரிசி | மு. நல்லையா |

தனாதிகாரி செல்வி ச. சிவஞானம் உள்ளிட்ட நிர்வாக சபையினர் தெரிவு செய்யப்பட்டனர். பிரதம மேற்பார்வையாளராக விருந்த திருமதி மேதர் அம்மா விலக அவ்விடத்திற்கு செல்விகள் கா. பாக்கியம், அ. மகேஸ்வரி என்போர் ஒருவர் பின் ஒருவராகச் சேவையாற்றினர். பின் 18,

7, 75 -ல் திருமதி துரைராசா நளாயினி நியமனமானார். முன்னைய உதவியாளர் இருவரும் தொடர்ந்து சேவையாற்றி வந்தனர். நளாயினி அவர்கள் பாலர் மேற்பார்வைப் பயிற்சி பெற்றவர். ஆண்டு தோறும் பெற்றார் தினவிழா, கலைவிழா, பரிசளிப்பு விழா என்பன நடத்துவதற்குப் பேருதவியாயிருந்தார். ஒவ்வொரு விழாக்களுக்கும் சிறுவர் பராமரிப்புத் திணைக்கள மேற்பார்வையதிகாரியிருந்த மாணிக்க நடராசா, செல்வி சண்முகம் என்போர் பிரதம விருந்தினர்களாக வந்து பாராட்டுத் தெரிவித்ததுடன் யாழ்ப்பாணத்தின் சிறந்த பாலர் விடுதி என சம்பவத் திரட்டுப் புத்தகத்திலும் பதிந்துள்ளனர். நளாயினி அவர்கள் வெளிநாடு செல்ல நேரிட்ட போது பெற்றார். ஊர்ப் பெருமக்களடங்கிய சபையினர் பெரிய பாராட்டுக் கூட்டம் வைத்து கையுறையும் வழங்கினர். பின்னர், செல்வி கிருபா சுப்பிரமணியம் அரவ்கள் நியமனமானார். வழமை போல் செல்வி செல்லத்துரை, திருமதி இரத்தினம் என்போர் உதவியாளர்கள், பாலர் விடுதியருகே மூடப்பட்ட நிலையிலிருந்த நெசவு நிலையக் கட்டிடத்தில் நடைபெற்ற 5 வயதிற்குட்பட்ட பாடசாலை செல்லாத சிறுவர்கள் நிலையமும் பாலர் தொகை கூடிய போதும் அரச உதவிப்பணம் முன்னைய தொகை மாணவருக்கே தான் கிடைத்தது. சிறுவர் நிலையம் பெற்றாரிடமிருந்து பெற்ற சிறிது உதவிப்பணம் தொடர்ந்து பெறப்பட்டது. பிறநாட்டு உதவி நிறுவனங்களிடமிருந்து பால்மா போஷாக்குணவு என்பனவும் பெற்று சீர் பெற நடத்தப்பட்டது. ஆண்டு தோறும் பெற்றார் தினவிழா என்பன வைத்து திணைக்கள மேலதிகாரிகளின் பாராட்டும் பெறப்பட்டு சமூகந்தந்த பிரதம விருந்தினரால் கிருபா சேவையும் பாராட்டப்பட்டது. இவர் பெற்றார் எல்லோராலும் நன்கு அறியப்பட்டவரானபடியால் ஓர் சுமூகமான நிலையில் திறம்பட நடக்க உதவியானது. காரியதரிசி மு. நல்லையா அவர்கள் முயற்சியால் ஓரளவு நிதி மேலதிகமாகச் சேர்க்கப்பட்டு சேமநிதியிலிடப்பட்டது. இவர் சரவணபவானந்த வித்தியாசாலை அதிபராகச் சேவையாற்றியமை பக்கத்திலிருந்த பாலர் விடுதிக்குப் பெரிதும் உதவியாயிருந்தது. இதே வேளை நீண்ட காலம் தனாதிகாரியாகச் சேவையாற்றிய திருமதி சிவஞானம் அவர்கள் காலமானார். இவரில்லம் பாலர் நிலையத்துக்கு அருகேயிருந்தமை அவர்

மேற்பார்வை யாரல் நிலையம் நன்கு நடக்க உதவியது. அவரிழப்பு நிலையத்துக்குப் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியதாக விளங்கியது.

மேற்கொண்டு தனாதிகாரியாக மார்க்கண்டு ஆசிரியர் நியமனமானார். அரச உதவிப்பணம் ரூபா 10/= லிருந்து 15/= ஆக உயர்த்தப்பட்டது. புத்தூர் மக்கள் வங்கியிலிருந்த சேமக்கணக்கு கோப்பாய் கிராம வங்கிக்கு மாற்றப்பட்டது. இக்கால கட்டத்தில் புதியதொரு கட்டிடமமைக்கத் திட்டமிடப்பட்டு உரிய வளவில மீதமாயிருந்த ஒரு பரப்புக் காணி சீ. கந்தையாவும் பெண் இலட்சுமிப்பிள்ளையும் அவர்களிடமிருந்து தரும நன் கொடையாகப் பெறப்பட்டது. நொத்தாரிஸ் சி. கனகரத்தினம் அவர்களால் 11429 இலக்க 22.12.1979 திகதி நன்கொடைவுறுதி முடிக்கப்பட்டது.

(1983 ல் நெருக்கடி நிலை வந்த போது இலங்கை ராணுவம் செய்த அட்டூழியங்கள் எதிர் பாராத பயங்கரமானவை 1987 ஐப்பசி அளவில் இந்திய ராணுவத்தால் எமது கிராம நிலை மிக மோசமடைந்தது.

கோப்பாய் சந்தியில் இந்திய இராணுவத்திற்கும் போராளிக்கு மிடையில் கடும் மோதல் செல்லடி 2.10.87- ல் கிராமத்திலுள்ள அனைவரையும் வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டது. அனைவரும் வெளியேற நேரிட்ட போதும் வயோதிபர், பிணியாளர் செல்ல முடியாத நிலையில் தங்கியோர் செல்லடியாலும் பட்டினியாலும் காலஞ் செல்ல நேரிட்டது. தமதூரிலிருந்து அகதிகளாக வெளியேறி நீர்வேலி, அச்சுவேலி, மட்டுவில், சாவகச்சேரி, கச்சாய் இறுதியாகச் சென்று அலைந்து திரிந்து திரும்பியவர்களை ராணுவம் தலையிட்டு நல்லூர் வரை வரிசையில் நடக்கச் செய்து அவ்விடமே விடுதலையாக்கினர். கோப்பாய்க் கிராம மக்களும் கோப்பாயூடாக கொண்டு சென்றே விடப்பட்டனர். 1987 கார்த்திகை பிற்பகுதியில் அகதிகளாகக் கட்டாயத்தின் பேரில் வெளியேற்றப்பட்டவர்கள் படிப்படியாகவே திரும்பினர். இடிபட்ட வீடுகள், வீடுகளில் எலும்புக் கூடுகள் இவையே கண்ட கோரக்காட்சிகள் வந்தவர்கட்கு உணவு இல்லை. மாற்ற உடையில்லை. வைத்திய வசதி

இல்லை. இப்படிப் பரிதாபம் அங்கவீன முற்றோர் பலர். கோரம் சொல்லுந்தரமல்ல)

அகதியாக வெளியேறிய நமது காரியதரிசி நல்லையா அவர்கள் பாடசாலையிலுள்ள பிரதான கோவைகளையும், பாலர் நிலையத்தின் சில முக்கிய பதிவேடுகளையும் எடுத்துச் சென்று தமது வீட்டில் பத்திரமான இடத்தில் வைத்து விட்டுப் புறப்படும் போது இந்தியராணுச் சூட்டிற்கு இலக்கானார். சூட்டுக் காயத்துடன் மறைந்து மறைந்து நீர்வேலி சென்று அங்கிருந்த நண்பர் உதவியோடு புத்தூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் பட்டபோது இரத்தப் பெருக்கால் வைத்திய வசதியின்றிக் காலமான பரிதாப நிலையேற்பட்டது. இவ்விழப்பு எமது சங்கத்திற்கு பாலர் நிலையத்துக்கு ஈடுசெய்ய முடியாததொன்று, இவரிடத்திற்கு நிர்வாக சபையிலிருநது நீண்ட காலம் அவருக்கு பக்கத் துணையாயிருந்த சீ.க. சுப்பிரமணியம் ஆசிரியர் காரியதரிசியாகத் தெரிவு செய்யப்பட்டார். (22.11.87இல் திரும்பி வந்த நாம் கண்ட அகோரக் காட்சிகளுடன் பாலர் நிலையத்தைப் பார்வையிடச் சென்றோம். கூரை செல்லடிகளால் ஓட்டை உடைத்து மேசைகளும் கதிரைகளும் சிதறிக் கிடந்தன. தளபாடங்கள் அடித்துடைக்கப்பட்டு விறகாகவும் எரிக்கப்பட்டிருந்ததும் காணக்கூடியதாக இருந்தது. பின்னால் ஓரளவு நிலமை சீரான போதும் இந்திய ராணுவ நடமாட்டம் குறைந்த பாடில்லை. எனினும் பாலர் விடுதி ஆரம்பிக்கப்பட்ட போதும் வரவு மிகக் குறைவு. மூடப்பட்டிருந்த பாடசாலை திறக்கப்பட்டதும் பாடசாலை மாணவர்ளோடு வந்து பாடசாலை விடும் போது மாணவர்களுடன் எமது நிலையப் பாலர்களும் சென்று விடும் நிலை தொடர்ந்தது.)

ஓட்டை ஒடிசலாக இருந்த கட்டிடத்தை திருத்த வேண்டிய அவசியமுண்டானது. கட்டிடத்துக்க மேலும் தூண்கள் நிறுவப்பட்டு அலுமினியம் சீற்றுக்குப்பதில் "அஸ்பெற்றோ சீற்" இனால் வேயப்பட்டது. முன் சேமநிதியிலிடப்பட்ட காசும் எடுக்கப்பட்டு ஓரளவு கட்டிடம் உறுதியாக்கப்பட்டது. கிழக்குக் கம்பி வேலி சேதமைடைந்திருந்த மையினால் அகற்றப்பட்டு மதில் கட்டப்பட்டது. இது விஷயமாய் தனாதிகாரி க. மார்க்கண்டு, காரியதரிசி சீ.க. சுப்பிரமணியம் இருவரது

முயற்சியும் போற்றப்பட வேண்டியவை. சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு உதவிக்கு நாமனுப்பியமனுக்கள் உரிய சிபாரிசுடன் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டபோதும் கவனிக்கப்படவில்லை.

பாலரைப் பராமரிப்பதற்குரிய உணவுப் பொருட்களின் விலை விஷம் போல் ஏறியது. 8/= ரூபாவிற்கு 1 கிலோ அரிசி 32/= ற்கு உயர்ந்தது. மற்றும் பொருட்களின் விலைகளும் இதே ரீதியில் கூடின. ரூபா 15/= லிருந்து உதவிப் பணத்தைக் கூட்டித் தருமாறு விண்ணப்பித்ததும் கவனிக்கப்படவில்லை. இந்த நிலையில் உள்ளூர் பொது ஸ்தாபனங்களில் உதவியை நாடினோம். பெற்றோர் நலன் விரும்களிடமிருந்து மாதந்தோறும் சிறிது உதவிப்பணம் சேர்க்கப்பட்டு மேற்பார்வையாளர் வேதனங்கள் சீர் செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நிறுவனங்கள், சர்வோதயம் தமிழர் புனர்வாழ்வு நிறுவனம், உள்ளூரண்பர்கள் ஸ்தாபனங்கள் என்பவற்றிடமிருந்து பால்மா, போஷாக் குணவு அன்பளிப்பு என்பன பெற்று பாலர் மாணவர்களும் ஓரளவு சீர் செய்யப்பட்டு வருகிறது. பிரதம மேற்பார்வையாளராக செல்வி பரமசாமி உதவி மேற்பார்வையாளராக செல்வி ஆ. பரமேஸ்வரி, உதவியாளராக திருமதி நடராசா பரமேஸ்வரி சேவையாற்றுகின்றனர்.

காரியதரிசி சீ.க. சுப்பிரமணியம் அவர்கள் 1994இல் அமரராகிவிட்டார். உதவி நிறுவனங்களிடமிருந்து வேண்டியன பெற இவரது சேவை முக்கியமாயிருந்தது. இவருக்கான அஞ்சலிக் கூட்டமொன்று பாலர் நிலையத்தில் நடத்தப்பட்டது. பிரதான நிர்வாகிகள் ஒருவர் பின் ஒருவராக மறைந்துவிட்டமையாலும் இளைப்பாறி வயோதிபம் அடைந்த நிலையில் பாலர் நிலைய மேற்பார்வை இளம் ஆட்களின் கையில் ஒப்படைக்கும் நோக்கில் கூட்டங்களுக்கு சமூகமளியாதவரிடங்கட்கு மூவரைத் தெரிவு செய்து அவர்கட்கு அன்புடன் அறிவிக்கப்பட்டது. குறித்த மூவரில் ஒருவராவது ஏற்றுக் கொண்டு கூட்டங்கட்கு வரவேயில்லை பழைய நிர்வாக சபையே தொடர்கிறத. புதியவர்கள் பொறுப்பேற்கப்பயம்.

சமூகசேவா சங்கத்தின் வேலை பாலர் விடுதி மேற்பார்வையுடன் நிற்கவில்லை. இராசவீதிக்கு மின்சாரம் பெறுவதில் விஷேடமாக காரியதரிசி மு. நல்லையா அவர்கள் சேவை அளப்பரியது. சுன்னாகம் மின்நிலையப் பொறியியலாளர் ச. குகதாசன் அவர்கள் இராச வீதி மின்னிலையம் ஆரம்ப விழாவின் போது சமூகசேவா சங்கத்துக்கும் விஷேடமாக செயலானர் மு. நல்லையா அவர்ட்கும் நன்றி தெரிவித்துப் பாராட்டியது எமது ஞாபகத்திலுண்டு.

சென்ற நெருக்கடி காலத்தின் போது இராசவீதி குண்டும் குழியுமாகக் காணப்பட்டது. நிலாவரையிலிருந்து யாழ் மாநகர சபைக்கு குழாய்மூலம் நீரெடுக்க - குழாய் தாழ்க்க வெட்டிய அகழி மெலும் வீதியை மோசமாக்கியது. இது விஷயமாய் சி. வெ. சுப்பிரமணியம், செ. தம்பியையா, பொ. விக்கினேஸ்வலிங்கம், க.இ. குமாரசாமி என்போர் உரிய பொறியியலாளரைப் பேட்டி கண்டு மனு சமர்ப்பித்தோம். குறித்தகாரியாலயத்தில் நமதூர் பெரியவர் பிறைசூடி அவர்கள் பிரதான செயலாளராகச் சேவையாற்றினார். பெரிதும் உதவினார். உடன் நிவாரண வேலைகள் செய்ய நிதியொதுக்கீடு செய்யப்பட்டது. தொடர்ந்து நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயம் சென்று முறையிட்டோம். உடன் நிலையான வீதியாக இருபாலை வீதியிலிருந்து ஆரம்பித்து வடக்கே முடியம் வரையும் செப்பமான வீதியாக்கப்பட்டு 30.03.1990இல் பூர்த்தியாகி பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. இது எமது சங்கத்திற்குச் செய்த பெரிய சாதனையாகும் பிறைசூடி அவர்களது மறைமுக உதவி போற்றத்தக்கது.

இன்று குறித்த சமூக சேவா சங்க நிர்வாக சபையில்

தலைவர் க.இ. குமாரசாமி
உபதலைவர் அ. ஜெயரத்தினம்
காரியதரிசி பொ. விக்கினேஸ்வரலிங்கம்
தனாதிகாரி க. மார்க்கண்டு

நிர்வாக சபையினர் : செ. தம்பியையா, இ. இராசரத்தினம், கா. பரமநாதன், செ. செல்வரத்தினம்

தற்போது பாலர் விடுதியில் 40 ஆண், 49 பெண் பாலர் வரவுண்டு.

1995 ஐப்பசியில் யாவரும் வெளியேறி 1996 வைகாசியில் திரும்பிய பிறகு பாலர் விடுதி மீளவும் நடைபெறுகிறது. 52 பாலர் வரையே சமூகம் முன்னைய நிர்வாகிகள் சிலர் இன்றும் திரும்பவில்லை. அண்மையில் நடந்த தேர்தலில் தலைவர் காரியத்ரிசியுடன் சீ. கதிர்காமநாதன் தனாதிகாரி, தி. அரசபிள்ளை உப செயலாளர் , செ. தம்பியையா உப தலைவர், பொ. சுப்பிரமணியம், க. சின்னத்துரை நிர்வாக சபையினர் தெரிவாகியுள்ளனர்.

பிரதம மேற்பார்வையாளர் ஆ. பரமேஸ்வரி, உதவி மேற்பார்வையாளர் சி. அமிர்தா, உதவியாளர் திருமதி அரசபிள்ளை என்போர் சேவையாற்றுகின்றனர்.

**சட்டம் சொல்வது**

*ஆயிரம் நிரபராதிக்கு விடுதலை கிடைக்கலாம்*

*ஆனால் ஒரு சுற்றவாளிக்குக் கூட தண்டனை கிடைத்தலாகாது.*

# அமரர் திரு க.இ.குமாரசாமி ஐயா அவர்களின் சமூகப்பணிகள்

**(மறுபிரசுரம் - பின்னிணைப்பு நினைவு மலரில் இருந்து பெறப்பட்டது)**

மனித வாழ்வில் பிறப்பு, இறப்பு நியதியாகும். இந்த இடைவெளியில் செயற்கரிய நற்கருமங்களை செய்த பெரியோர் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். அந்த வரிசையில் அமரர் க.இ.குமாரசாமி ஐயாவும் ஒருவர். அவருடன் கடந்த மூன்று தசாப்தங்களாகப் பழகவும் இணைந்து சேவையாற்றவும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் பல்துறை வல்லுனர், சிறந்த ஆசானாகவும், ஆளுமைமிக்க அதிபராகவும், சிறந்த விவசாயியாகவும் வாழ்ந்து காட்டினார். இவற்றைவிட சோதிடகலை, கூட்டுறவு நூலாக்கம். தொழிற்சங்கம் ஆகிய துறைகளிலும் தனது முத்திரையைப் பொறித்துள்ளார்.

இவரது சேவையை கருதி நீதி அமைச்சு இவருக்கு சமாதான நீதிவான் பட்டத்தை வழங்கிக் கௌரவித்து. இதற்காக கிராமத்தவர்கள் ஒன்று சேர்ந்து மிகப் பெரிய பாராட்டு விழா நடாத்தியமையும் நினைவு நினைவு கூரத்தக்கது. எந்த வைபவங்களிலும் இவரை தேசிய உடையில் (வேட்டி, நாஷனல், சால்வை) காணலாம். தனத குடும்பத்திற்கு மேலாக கிராம முன்னேற்றத்தை மனதில் கொண்ட பெரியார் எங்கள் குமாரசாமி ஐயா.

மேலும் அவரது சேவையைக் கௌரவித்து கோப்பாய் லயன்ஸ் கழகம், இவருக்கு சிறப்பு விருது வழங்கிக் கௌரவித்து.

கோப்பாய் கிராமத்திலும், கிராமத்திற்கு அப்பாலும் அளப்பரிய பல பொதுப்பணிகள் இவர் ஆற்றியுள்ளார். அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடல் பொருத்தமாகும்.

1. வடகோவை வாலிபர் சங்கம் அமைத்து கண்ணகை அம்பாள் சனசமூக நிலையத்தை உருவாக்கினார்.
2. முன்னைய காலத்தில் கிராமமக்களின் பிரதான தொழில் சுருட்டுத் தொழிலாகும். அவர்களின் வருங்கால தேவைகளை உணர்ந்து கோப்பாய் சுருட்டு தொழிலாளர் ஐக்கிய சங்கத்தை 1946ல் உருவாக்கினார்.

கால ஓட்டத்தில் நாட்டு சூழ்நிலை காரணமாக சுருட்டுச் சங்கம் செயலிழக்க சுருட்டு தொழிலாளரட சிக்கன கடன் வழங்க சங்கமாக, அதனைப் பதிவு செய்து ஏழை சுருட்டு தொழிலாளரின் பங்குப் பணம் கிடைக்க வழி செய்தார்.

3. சிகரெட், புகையிலை உற்பத்தியாளர் சங்த்தை உருவாக்கினார். விவசாயிகளை ஊக்குவித்தார்.
4. விவசாயிகளை பெரும்பான்மையாக கொண்ட கோப்பாய் கிராமத்தில் வலி.கிழக்கு விளைபொருள் விற்பனவு கூட்டுறவு சங்கத்தினை ஆரம்பித்து இயங்கச் செய்தார்.
5. கோப்பாய் சந்தியில் ஐக்கிய பண்டகசாலை உருவாகவும் முன்னின்று உழைத்து மாடிக்கட்டம் அமைய உதவினார். இது தற்போதய வலி.கிழக்கு தென்பகுதி பலநொக்கு கூட்டுறவு சங்க விற்பனை நிளை. இல12 மாற்றம் பெற்றுள்ளது. இச்சங்கத்தின் இயக்குநர்சபை தலைவராக பணியாற்றி அதன் வளர்ச்சிக்கு உழைத்தார்.

மேலும் கோப்பாய் கிராமிய வங்கி அமைந்தள்ள மாடிக்கட்டம், வெங்காய சங்க கட்டடம் ஆகியன இவரின் செயல்திறனுக்குச் சான்று பகர்கின்றது.

6. பிரதேச செயலக காணி கொள்வனவுக் குழுவில் உறுப்பினராக இருந்து பிரதேச செயலகம் கோப்பாயில் அமைய முன்னின்று உழைத்தவர்.

7. தேசிய கல்வியற் கல்லூரி கோப்பாயில் அமைய அமைவிட காணியை நன்கொடையாகப் பெறுவதற்கு தனது பங்களிப்பினை முழுமனதுடன் வழங்கி அதில் வெற்றியும் கண்டார்.

**சமயப்பணிகள்**

1. வடகோவை கண்ணகை அம்பாள் தேவஸ்தான பரிபாலசபை இயக்குனர் சபை தலைவராக பணியாற்றி இவ்வாலயத்தைப் புனரமைத்து கும்பாபிஷேக பெருவிழாவை நடாத்தினார்.
2. வடகோவை ஞான பண்டித சைவிருத்தி சங்கம் அடப்பந்தாளி வைரவர் கோயில், உக்கிர வைரவர் கோயில் ஆகிய ஆலயங்களின் வளர்ச்சியில் பங்கு கொண்டு இறைபணியாற்றினார்.
3. வடகோவை ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி கோவிலில் தருமபரிபாலன சபை அமைவதில் முன்னின்று வழிகாட்டி பரிபாலனசபை நிர்வாக உறுப்பினராகவும் பணியாற்றினார்.
4. யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை ஸ்தாபகரில் ஒருவராக விளங்கி அதன் துணைத் தலைவராக இறுதிக்காலம் வரை பணியாற்றியவர்.
5. அரசினர் வைத்தியசாலை கோப்பாயில் அமைவதற்கு ஏதுவாக தேவையான காணியை அன்பளிப்பாகப் பெறுவதில் முன்னோடியாகவும் அதன் இயக்குநர் சபையின் பிரதான உறுப்பினரகாவும் செயற்பட்டவர்.
6. அந்நிய காலசேவை சபையை ஸ்தாபித்து அதன் சேவையை மக்களிற்கு கிடைக்க ஆவன செய்தார். அதன் காப்பாளராக இருந்து வழிநடாத்தினார்.

**கல்விச்சேவை**

1. சைவப் பாரம்பரியத்தைப் பேண கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை அமைவதில் துணை நின்றவரக்ளில் ஐயாவும் ஒருவர்.
2. தனது அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் பாடசாலை நலனில் அக்கறை கொண்டு உழைத்தவர். பாடசாலைக்கு தேவையான விளையாட்டு மைதான காணி கொள்வனவில் முன்னின்று உழைத்தவர்.

3. பாலர் பகல் விடுதி பராமரிப்பு நிலையம் நிலையம் ஒன்றின் அரச உதவியுடன் ஸ்தாபித்தவர்களில் இவரின் பங்களிப்பு முக்கியமானது. மேலும் இறுதி வரை அதன் தலைவராக இருந்து வழிநடாத்தினார். பாலர் விடுதிப்பராமரிப்பு முக்கியத்தவத்தையும் தேவையையும் மக்களுக்கு உணரச் செய்தார்.
4. வடக்கு, கிழக்கு ஆசிரியர் சங்க பிரதான நிர்வாகியாகவும் தமிழ் ஆசிரியர் சங்க செயலாளராகவும் பணியாற்றி அதன் வளர்ச்சிக்கு உதவியவர். பொதுப்பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் ஆங்கில பாடப்பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் சமசம்பளம் வேண்டித் தொழிற்சங்க போராட்டம் நடாத்தி அதில் வெற்றியும் கண்ட பெருமகன்.

**3. கிராமத்தில்**

**விவசாயம்**

1. விவசாய சம்மேளன இயக்குநர்சபை உறுப்பபினராக இருந்து சிறந்த வழியாகாட்டியகத் திகழ்ந்தவர்.
2. உவர் நில நெற்செய்கைக் குழு அங்கத்தவராக இருந்து உவர்நில நெற்செய்கையில் வெற்றி கண்டவர். தொடர்ந்தும் பல முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் நாட்டு சூழ்நிலை காரணமாக கைகூடவில்லை.
3. கிராமத்தில் விவசாயத்தோடு தொடர்புடைய குளங்கள், கேணிகள், வாய்க்களால்களின் அமைவிட தகவலை வழங்கியவர்.
4. விவசாய உற்பத்திப் பொருட்களை (வெங்காயம், மிளகாய்) சங்கத்தினூடாக தென்னிலங்கைக்கு அனுப்பி விவசாயிகளின் வருமானத்தில் மாற்றம் காண வழிகாட்டியவர்.

**இறுதிக்கால விருப்பங்கள்**

1. ஏழைமக்களின் இறுதிக்கிரியைகள் செய்ய பொதுமண்டபம் ஒன்றை கந்தன்காடு மயானத்திற்கு அண்மையில் அமைத்தல்.
2. கிராமத்திற்கென ஒரு கல்யாணமண்டபம் அமைத்தார். வடகோவை ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி கோவில் தெற்கு வீதியில் இம் மண்டபம் தற்சமயம் அமைக்கப்பட்டு வருகிறது.

3. உவர் தரையில் நெற்செய்கை ஆரம்பிதது அக்காணிகளை பயனுடையதாக்குதல் (கடந்தகால அனுபவத்தை அடிப்படையாக வைத்து)
4. தான் எழுதிய கையெழுத்து பிரதிகளாக உள்ள மேலும் நான்கு நூல்களை அச்சிட்டு வெளியிட வேண்டும்
5. கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட சங்க செயற்பாடுகள் தொடர்ந்து நல்ல முறையில் நடைபெறவும் அதன் பலாபலன்கள் மக்களிடம் சென்றடைய வேண்டும்.

ஐயா அவர்களது ஆத்மா எல்லா வல்ல பரம்பொருளின் பாதாரவிந்தங்களை அடையவும் அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தாரிற்கு இறையருள் கிடைக்கவும் பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! சாந்தி!**

**திரு.சிவலோகநாதன்**
**கோப்பாய்.**

வாழ்ந்து கொண்டிருப்பவனுக்கும், செத்துப் போனவனுக்கும் உள்ள வித்தியாசம் தான் படித்தவனுக்கும் படிக்காதவனுக்கும் உள்ள வித்தியாசம்.

- அரிஸ்ரோட்டில் -



அமரர் க. இ. குமாரசுவாமி அவர்களின்
மூத்த மகளின் பதிவுத் திருமணத்தின் போது



# கோப்பாய் கந்தசுவாமி கோயில்
# பிரதம குருவின்
# அஞ்சலி உரை

**(மறுபிரசுரம் - பின்னிணைப்பு நினைவுமலரில் இருந்து பெறப்பட்டது)**

கோவையூர் கிழார் என்று கோவையூர் மக்கள் அன்புடன் அழைக்கும் இளையதம்பி குமாரசாமி ஆசிரியர் அவர்கள் 17.12.2009 அன்று சிவபதம் அடைந்தார். அவருக்கு எமது குடும்பத்தினர் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னார் தமது வாழ்நாளில் குருபக்தியும் தெய்வபக்தியும் உடையவர். எமது தாத்தாவாகிய சுப்பிரமணியக்குருக்கள் அவர்களிடம் மிகவும் நெருக்கமாக பழகியவர். அவரிடம் நயன தீஷ்சை பெற்று அவருக்க பிரதம சிஷ்யனாக வாழ்ந்தார்.

நான் சென்றமாதம் அவரின் இல்லத்துக்கு சென்ற போது அன்றைய தினம் கிரகசாந்தி வைபவம் நடைபெற்று தொடர்ந்து அன்னார் தமது பிள்ளைகள், உறவினர் ஆகியோரை அருகில் இருத்தி தேவார திருப்பதிகங்களைப் பாடி எல்லோரையும் மகிழ்வித்தார். அந்த காட்சியை நாம் இனி எப்போது காண்போம்? அவர் அல்லும் பகலும் கோவையூர் சித்திரவேல் பெருமானை மனதில் இருத்தி திருப்புகழ் பாடி மகிழ்வார்.

தமது ஆயுள் காலத்தில் நாற்பது ஆண்டு காலத்தை ஆசிரியர் பணியிலும் சுமார் அறுபத்தெட்டு ஆண்டு காலத்தை சமூக சேவையிலும் செலவிட்ட பெருமகனின் அனுபவங்கள் எம் அனைவருக்கும் படிப்பினை தரத்தக்கவையாகும். அவர் தள்ளாத வயதிலும் வருங்கால சந்ததியினருக்கு கோப்பாய் வரலாறு, கூட்டுறவு என்ற நூல்களை வெளியிட்டு இன்றைய சந்ததியினரை நல் வழியில் இட்டு சென்றுள்ளார். இவர் கோவையூர் உள்ள பல ஸ்தாபனங்களிலும் ஆலயங்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அவற்றின் வளர்ச்சியிலும் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து சேவையாற்றி வந்துள்ளார்.

கோப்பாய் கிராமத்தின் அரும்பெரும் புதல்வரும் முதுபெரும் ஆசானுமாகிய குமாரசாமி ஆசிரியர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முருகப் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!!! சாந்தி!!!

**பூரண கீதச்சந்திரகுருக்கள்**
**பிரதமகுரு**
**ஸ்ரீ சித்ர வேலாயுத சுவாமி கோவில் கோப்பாய்.**

எமது நல்வாழ்விற்கு மிகவும் முக்கிய தேவையாக இருப்பது எமது உடலைப் பாதுகாத்து வைப்பதே. எமது மனோநிலைகள் உடல் நிலையை பாதிக்கும் வல்லமை கொண்டவை. உடல் நலத்தைப் பாதிப்பவற்றுள் கோபமும் பொறாமையும் மிக முக்கியமானவை. இந்த இரண்டும் இரத்தத்தையே நஞ்சாக்கி விடும். தகாத நடத்தைகள் கூட எமது இரத்தத்தை நஞ்சாக்கி விடுவதுடன் எமது நிலையினைப் பாதிக்கிறது.

- வில்பிரட் நோர்த் பில்ட்

# முதுபெரும் ஆசிரியபிரான்

**(மறுபிரசுரம் - பின்னிணைப்பு நினைவுமலரில் இருந்து பெறப்பட்டது)**

கோப்பாய்த் திருவூர் செய்த மாதவத்தால் காலத்துக்குக் காலம் பேரறிஞர்களை அத்திருவூர் பெற்ற பெருமை பேசப்டுகிறது. கோவைக்கிழார் என்றும் ஆசிரியத்திலகம் என்றும் சிறப்பு நாமங்கள் சூட்டி கௌரவிக்கப்பட்டவர் அமரர். குமாரசாமி உபாத்தியாயர் அவர்கள். கல்வியிலும் கடவுள் பக்தியிலும் சமூகப்பணிகளிலும் அவருக்கு நிகர் அவரே. ஆயிரம் பிறை கண்ட பின்பும் தளராத உறுதியோடு சைக்கிள் வண்டியில் இளைஞராக ஓடித்திரிந்து பணி செய்தவர். எங்கள் கோப்பாய் கிராமத்தின் மூத்த பிரஜை. வரலாறுகள் தெரிந்த நடமாடும் களஞ்சியம். ஆசிரிய சமூகத்துக்காக அனவரதமும் பாடுபட்ட தொழிற்சங்கவாதி.

இந்துமதத் தலைவர்கள் நிறுவன ரீதியாக செயற்பட வேண்டும் என்பதற்காக குரல் கொடுத்து இந்துப் பேரவை உருவாக்கல் பணியில் உழைத்தவர். சிலப்பதிகாரத்து நாயகியாகிய கண்ணகியைக் கடவுளாக பத்தினித் தெய்வமாக வழிபட்ட வரலாற்றை ஆய்வு ரீதியாக ஆராய்ந்து அற்புத மலரை வெளியிட்ட அறிஞர். முதுபெரும் பண்டிதர் கலாநிதி க. சச்சிதானந்தன் அவர்கள் கோப்பாய் சரவயபவானந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற அமரரின் கவிதைமலர் வெளியீட்டில் கூறிய வார்த்தை இத்தகைய ஆற்றலாளர் அரிதிலும் அரிது என்றார். அரிதிலும் அரிதாகிய உத்தமரை யாம் இழந்துவிட்டோம்.

எத்தனை ஏழை மாணவரின் வாழ்வுக்கு வழிகாட்டிய இவ் இனிய ஆசானின் நாமம் எளிதில் மறைந்து விடாது. அவரது குடும்பமே கல்விப்பணி செய்த குடும்பம். உள்ளதை உள்ளவாறு சொல்லிலும் எழுத்திலும் வெளிப்படுத்திய பண்பாளர். தெனது அருமை மகள் அரவிந்தகுமாரி அவர்களின் பிரிவு குறித்து எழுதிய கட்டுரை இன்னும் மனதில் நிறைந்திருக்கிறது. குறிப்பாக அக்கட்டுரையில் கூட வாழ்வு பற்றிய விடயங்களைக் கூறி மரபு ரீதியான நம்பிக்கைகளைத் தெளிவுபடுத்திய சிறப்பு தனித்துவமானது.

எனது தந்தையார் என்றும் மதித்துப் போற்றிய பெருமகன் இவர். எங்கள் பெரிய தந்தையார் அமரர். க. இராமுப்பிள்ளை அவர்களுடன் கற்றவர். எங்கள் குடும்பத்துடன் நிறைந்த அன்பு கொண்டு பழகியவர். எனது வளர்ச்சிக்கு என்றும் நல்லாசி வழ்கிய பெருந்தகை. அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல பலானை அம்பானளின் திருவடியில் ஆறுதல் பெறப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**ஆறு. திருமுகன்**
**தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.**

அரசியல்வாதிகள் இயற்றும் சட்டங்கள் அடிக்கடி மாறும் அறிவாளிகள் இயற்றும் நூல்கள் அமரத்துவம் வாய்ந்தவை - அழிவற்றவை

- பேர்னாட்ஷா -

# ஆயிரம் பிறைகண்ட சமூக ஜோதி

**(மறுபிரசுரம் - பின்னிணைப்பு நினைவுமலரில் இருந்து பெறப்பட்டது)**

சில மனிதர்கள் பெரியவர்களாகப் பிறக்கின்றார்கள். சிலர் தங்கள் முயற்சியாலும் செயற்பாட்டாலும் பெரியவர்கள் ஆகின்றனர். சிலர் மீது பெரியவன் என்ற பட்டம் திணிக்கப்படுகிறது ஏ்னபது மகாகவி ஷேக்ஸ்பியரின் வாக்கு ஆகும். தனது முயற்சியினாலும், உழைப்பினாலும் சேவையினாலும் உயர்ந்த உத்தமர்கள் வரிசையில் திரு.க.இ. குமாரசுவாமி அவர்களும் ஒருவராகத் திகழ்கின்றார். "மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை" என்ற உயர்ந்த நோக்கத்தோடு இவர் பணியாற்றினார். ஒருவருடைய பெருமையயும், சிறுமையையும் அளவிடும் கருவியாக அவர்களின் செயல்களே காணப்படுகின்றது. என்பதைப்

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும்**
**தத்தம் - கருமமே கட்டளைக் கல்.**

எனச் செந்நாப் போதரின் தமிழ்மறையாகிய திருக்குறளும் கூறுகிறது.

இவர் நல்லதொரு குடும்பத் தலைவனாக, நல் ஆசிரியராக, மிகச் சிறந்த அதிபராக, நல்லதொரு கூட்டுறவாளனாக, தொழிற்சங்க வாதியாக, சமய பற்றுள்ளவராகப் பலதுறைகளில் தன்னை ஈடுபடுத்தி அல்லும் பகலும் அயராது பணியாற்றி வந்தார். .வர் கோப்பாய்க் கிராமத்தின் மீது கொண்ட கிராம மக்கள் இவருக்கு "கோவைக்கிழார்" என்ற பட்டத்தினைச் சூட்டிக் கௌரவித்தார்கள்.

**ஆசிரியப்பணி**

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற முதுமொழிக்கு ஏற்ப நமது சமுதாயத்தில் நல் ஆசிரியர்கள் தெய்வமாகவே மதிக்கப்பட்டார்கள். ஞான விளக்குகளாகச் செயற்பட்ட ஆசிரியர்கள் மாணவ சமுதாயத்திற்கு மாத்திரமல்லாது தான் வாழும் சமூகத்திற்கும் வழிகாட்டிகளாகத் திகழ்ந்தார்கள். குமாரசுவாமி ஐயா அவர்கள் ஆசிரியப் பணியைத் தெய்வீகமாகப் பணியாகவே கருதிச் செயற்பட்டார். ஆசிரியராக, அதிபராக எல்லாம் சிறப்பாக பணியாற்றி

மாணவர்களினதும் பெற்றோரினதும் அன்பிற்குப் பாத்திரமாகத் திகழ்ந்தார். மாணவர்களுடைய கல்வி அபிவிருத்தியில் கண்ணும் கருத்துமாக இருந்து அக்கறையுடன் செயற்பட்டார்.

**தொழிற்சங்கப் பணி**

இவர் சிறந்ததோர் தொழிற்சங்க வாதியாகவும் செயற்பட்டார். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிதாமகர்களில் ஒருவராக இருந்து ஆசிரியர்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தார். அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம், தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தை உருவாக்கிய சிற்பிகளில் ஒருவராகத் திகழ்ந்தார்.

**கூட்டுறவுப்பணி**

"கூட்டுறவால் நாட்டுயர்வு" என்பதை நன்குணர்ந்த இவர் ஐக்கிய நாணய சங்கத்தின் கிளையைத் தனது கிராமத்தில் உருவாக்க ஏழை விவசாயிகள் நலன் பெற உதவினார். நீர்வேலி ப. நோ. கூ சங்கத்தின் தலைவராக இருந்து கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்காகப் பணிகள் பல புரிந்தார். கூட்டுறவுத் துறையின் ஊடாக ஏழை விவசாயிகளின் உற்பத்திப் பொரட்களைச் சந்தைப்படுத்தும் வசதிகளைச் செய்து கொடுத்தார்.

**சமயப்பணி**

சைவத்தமிழர்களுக்கு ஒரு நிறுவன அமைப்பு வேண்டும் என்பதை உணர்ந்த ஐயா அவர்கள் இந்து சமயப் பேரவையை உருவாக்குவதற்காக அயராது உழைத்தார். இதன் உபலைவராக இருந்து நற்பணிகள் பலவற்றை ஆற்றினார். கோப்பாய் கிராமத்து ஆலயங்கள் பலவற்றில் நிர்வாகப் பணிகளை ஏற்றுச் சிறப்பாக நடாத்தினார். பலானை கண்ணகை அம்மன் கோயிலின் வளர்ச்சியில் இவர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியதாகும்.

**நூலாசிரியர்**

வாழ்வின் இறுதிக் காலத்தில் தனது சிந்தனைகளை குால்வடிவில் வெளியிடும் முயற்சிகளில் ஈடுபட்டார். கோ்பபாய் கிராமத்தின்

வரலாற்றினையும் சிறப்பினையும் தொகுத்து அழகியதொரு நூலினை வெளியிட்டார். கண்ணகி வழிபாடு பற்றிய சமய நூலினை வெளியிட்டதோடு கூட்டுறவுத் துறை பற்றிய அரியதொரு நூலினையும் வெளியிட்டார்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் பெருமானின் வாக்கையே குறிக்கோள் வாசகமாகக் கொண்டு திரிகரண சுத்தியுடன் பணியாற்றிய ஐயா அவர்கள் ஆயிரம் பிறைகண்டு நிறைவான வாழ்வு வாழ்ந்து "கலியாணச் சாவு" என்னும் மரணத்தை தழுவிச் சிவப்பேறு எய்தினார். அவரின் ஆன்மா பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் பாதார விந்தங்களில் இணைந்து அமைதி பெற வேண்டுமென்று நாம் அனைவரும் இறையருளைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சிவத்தமிழ் வித்தகர்**
**சிவ. மாகலிங்கம்**

**சிந்தனைக்கு**

நாம் எப்பொழுதும் முள்ளுக்குள் ரோசா இருக்கின்றதே
என்று சந்தோசப்பட வேண்டுமே தவிர ரோசாவுக்குள்
முள்ளிருக்கின்றதே என்று கவலைப்படக் கூடாது.
அதாவது வறுமைக்குள்ளும் பண்பாக நடக்கின்றான்
என்று சந்தோசப்பட வேண்டுமே தவிர
அப் பண்புடன் வாழும் அவனிடத்தே வறுமை இருக்கின்றது
என்று அவனை இழிவாகப் பார்க்க கூடாது.

# எங்கள் பெரியையா

## (மறுபிரசுரம் - பின்னிணைப்பு நினைவுமலரில் இருந்து பெறப்பட்டது)

அமரர் திரு. க. இ. குமாரசாமி அவர்கள் எங்கள் அன்புத் தந்தையார் அமரர் திரு. க. இ. சரவணமுத்து அவர்களின் பேரன்புக்கும், பெருமதிப்புக்குமுரிய அண்ணராகத் திகழ்ந்தவர். அவர்களின் பாசமிகு சகோதரர்கள் அமரர்களான திருமதி. சிவக்கொழுந்து, கதிரவேலு, திரு. க. இ சுப்பிரமணியம் ஆவர். எமது அப்பப்பா, அமரர். க. இ. இளையதம்பி அவர்களின் இல்லத்தரசி சின்னாச்சிப் பிள்ளை அவர்கள் இறைபதம் அடைந்த காலத்திலிருந்து, அப்பப்பாவிற்கு வலக்கரமாக இருந்து தனது சகோதரர்களின் வாழ்க்கைச் நிறப்புக்காக தம்மாலியன்றவரை பாடுபட்டவர் எமது பெரியையா. தமது திருமணத்தின் பின் வாழ்கைத் துணைவியார் அமரர் திருமதி சரஸ்வதி அவர்களுடன் இல்லற வாழ்விற் சிறப்புற்றிருக்கும் காலத்தில், தமதன்ப் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிலும், வாழ்க்கைச் சிறப்பிலும் கவனம் செலுத்தியதோடு மட்டுமல்லாது, தமது அன்பான மனைவி பிள்ளைகள் அனைவரையும், தமது சகோதர குடும்பங்களின் அனைத்து முன்னேற்றங்களுக்கும் உதவி செய்ய உற்சாகப்படுத்தி உறுதுணையாக விளங்கினார்.

எமதன்பான பெரியையா, தமது குடும்ப நலனிலும் சகோதர குடும்பங்களின் வளர்ச்சியிலும் எவ்வளவு அக்கறையாகத் தொழிற்பட்டாரோ, அவ்வளவுக்கும் மேலாக எமது மக்களுக்கு ஆற்றிய அளப்பரிய சேவைகளை நாமறிவோம். அன்னார் கோப்பாய் சரவணபவனானந்த வித்தியாலயத்தில் வகித்த ஆசிரியர், அதிபர் பதவிகள் மூலம் எமது மக்களின் கலாச்சார சமூக மேம்பாட்டில் அயராது உழைத்தார்.

அக்காலப்பகுதியில் தமிழர் ஆசிரிய சங்கத்தின் செயலாளராகப் பொறுப்பான பதவியை வகித்தன் மூலம், ஆசிரிய சமூகத்தினரின் முன்னேற்றத்தில் அக்கறையுடன் செயற்பட்டார். மேலும் கூட்டுறவாளர், சமாதான நீதவான் போன்ற பொறுப்பான பதவிகளையும் நீண்ட காலம்

வகித்து நீதவான் போன்ற பொறுப்பான பதவிகளையும் நீண்ட காலம் வகித்து சமூகத்திற்குச் செய்த அளப்பரிய சேவைகளை நாமறிந்து மேலும் சைவாலயங்களில் ஆற்றிய பணிகளும் வெளியிட்ட சைவசமய நூல்களும், சைவ சமயத்தின் வளர்ச்சியில் அன்னாரின் பெரும் ஈடுபாட்டைப் பறைசாற்றுகின்றன.

எமது பெரியையாவின் சிறப்பான பயனுள்ள நீண்ட கால வாழ்க்கைப் பயணமான, "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்பதனை வலியுறுத்தகின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

**அமரர் திரு.க.இ.சரவணமுத்து அவர்களின்**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

ஒவ்வொரு மனிதனும் பிறந்தது வெற்றி பெறத்தான்
தோல்வியடைய அல்ல (ஹென்றி டேவிட்தோரர்)

தனி மனிதனின் தனி உரிமையான சிந்தனையால்
சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை
(ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்)

இரக்கம் காட்டுங்கள் ஆனால் ஏமாந்து போய்விடாதீர்கள்
(மாத் யூ கிரீன்)

# நிறைவான வாழ்வு

**(மறுபிரசுரம் - பின்னிணைப்பு நினைவுமலரில் இருந்து பெறப்பட்டது)**

இறைவன் திருவருளினால் கிடைக்கப் பெற்றதே மனிதப்பிறவி. ஒருவன் பூவுலகில் பிறந்து தனது வாழ்க்கையை செவ்வனே நிறைவு செய்து கொண்டு விடைபெறும்போதுதான் இறைவன் மீண்டும் அவனை விண்ணுலகுக்கு அனுப்பி வைக்கின்றான். மனிதப்பிறவி கிடைப்பது என்பது ஒருவனது பூர்வபுண்ணியமே. இந்நிலையில் ஒருவன் பிறந்து இறக்கும் வரை தான் செய்ய வேண்டிய பணிகளை செவ்வனே ஆற்றி நிறைவு செய்து கொள்ளும்போதுதான் அவன் வாழ்வு நிறைவு பெறுகின்றது. நிறைவில்லாத வாழ்வு நிலையில்லாத வாழ்வு நிறைவு பெறுகின்றது. நிறைவில்லாத வாழ்வு நிலையில்லாத வாழ்வு போலாகும்.

நிலவளம், நீர்வளம், இயற்கைவளம் என்பன ஒருங்கே அமையப்பெற்றது கோவையம்பதி. இப்புண்ணியபதியிலே சைவாலயங்களும், கல்விச்சாலைகளும், சமூக நிறுவனங்களும் நிறைந்து காணப்படுகின்றது. கோவையம்பதியில், கிளுவானை ஒழுங்கையில் அரவிந்தவாசம் எனும் கல்வி மணம் வீசும் இல்லத்தில் வசித்தவர்தான் அமரர் க.இ.குமாரசாமி அவர்கள். குமாரசாமி ஐயா அவர்களை நினைத்துப் பார்க்கும்போது அவர் அணிந்திருக்கும் வெண்ணிற ஆடைதான் உடனடியாக ஞாபகத்திற்கு வருகின்றது. ஆள்பாதி, ஆடைபாதி என்பார்கள். உண்மையில்லாமல் இல்லை. வேட்டி உடுத்து, நஷினல் அணிந்து, இருதோள்களாலும் சால்வையை வாரி முன்னே தவழவிட்டு நெற்றியில் விபூதி அணிந்து, சந்தனமிட்டு தம் கடமையை நிறைவேற்ற உலாவரும் காட்சி மனக்கண்முன் நிழலாடுகின்து. தமிழ்மகன் ஒருவன் இவ்வாறு தம் தேசிய உடை அணிந்து வருகின்ற காட்சியை எதிர்காலத்தில் காண்போமா என்பது கேள்விக்குறியே. திருவாளர் குமாரசாமி அவர்கள் வேட்டியுடன் நாஷனல் அணிந்து சால்வையை போர்த்தி எக்காரியத்தை ஆரம்பித்தாலும் அது வெற்றியே. அது அவருக்கான ஆளுமை நிலையைப் பறைசாற்றுகின்றது. ஆகமுடியாத காரியமும் தங்கு தடையின்றி நிறைவேறும்.

அமரர் குமாரசாமி ஐயா அவர்கள் சமய சமூகப்பணிகளில் அளவில்லாத பற்றுக்கொண்டு அவற்றில் ஈடுபட்டு ஆனந்தமடைய்நதார். அகில உலக இந்து மாமன்றம், யாழ் இந்து சமயப் பேரவை மற்றும் கோப்பாய் பிரதேச சைவாலயங்கள் போன்றவற்றில் தலைவராகவும் உறுப்பினராகவும் இருந்து அளப்பரிய சேவைகளாற்றினார். சமூகப் பணிகளில் ஈடுபடுவதில் அலாதிப்பிரியர். பல்வேறு சமூக நிறுவனங்களிலும் அங்கத்தவராக இருந்து தன்னாலான சேவைகளை ஆற்றினார். பல்வேறு நூல்களையும் வெளியிட்டு அளவில்லாத ஆனந்தமடைந்தார். இத்தகை யசமய சமூகப்பணிகள் குமாரசாமி ஐயா அவர்களது நிறைவான வாழ்வுக்கு கட்டியம் கூறி நிற்கின்றது.

ஆசிரியராக இருந்து அதிபராக இருந்து நன்மாணக்கர்களை உருவாக்கி அவர்களது வாழ்வின் வசந்தத்தை கண்ணுற்ற ஆன்நதக் கண்ணீர் சொரிந்தார் குமாரசாமி வாத்தியார் அவர்கள். வாத்தியார் அவர்களிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் இன்று உயர் பதவிகளில் இருப்பதை நினைத்து மிகவும் புளகாங்கிதமடைந்தார் குமாரசாமி வாத்தியார் இவ்வகையிலும் நிறைவுகண்டார் திருவாளர் குமாரசாமி அவர்கள்.

எவரொருவர் வீட்டிற்கு சென்றாலும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்து அவர்களுடன் இனிமையாகக் கதைத்து அவர்களது குறை நிறைகளைக் கேட்டறிந்து அவற்றுக்கு மருந்தும் சொல்லி அன்புடன் அனுப்பி வைப்பார். அறிவுசால் பெருந்தகை. ஆளுமை வீரன். இரக்கமுடையான். இத்தகைய பண்பாளனின் நிறைவான வாழ்வை எண்ணிப் பார்க்கின்றோம்.

வாழ்க்கை எனும் சகட ஓட்டத்தில் ஒருவன் எவ்வாறு வாழ்ந்து முடித்தான் என்பதை அவனின் இறப்பின் பின் எண்ணிப் பார்க்கின்றோம். திருவாளர் க.இ.குமாரசாமி ஐயா அவர்கள் தன் வாழ்வை பூரணப்படுத்துவம் மிக்கதாக நிறைவு செய்திருக்கின்றார். தனது

தொண்ணூற்றி ஆறு வருட வாழ்வை நிறைவான வாழ்வாக பூர்த்தி செய்து அனைவரிடம் இருந்தும் விடைபெற்றுச் சென்றிருக்கின்றார். அவரது வாழ்வு ஆனந்த வாழ்வு. நிறைவான வாழ்வு.


**திரு பஞ்சாட்சரம் கணேசன்**
**அசிரியர்**

**"ஆசிரியமணி இல்லம்"**
**உரும்பிராய் மேற்கு, உரம்பிராய்**


### சொல்வதெழுதுதலின் நன்மைகள்

1. பேசும் மொழியை விரைவாகவும் சரியாகவும் பொருளுணர்ந்து கொள்வதற்கு ஒரு நல்லவாய்ப்பாகும்.

2. கவனிக்கும் ஆற்றலையும் [illegible] ஆற்றலையும் மன ஒருமைப் பாட்டையும் நன்கு வளர்க்கின்றது

3. நிறுத்தக் குறிகளைச் சரியாக இடுவதற்கான பயிற்சியைத் தருகின்றது.

4. கையெழுத்தின் விரைவையும் தெளிவையும் வளர்க்கத்துணை நிற்கின்றது.

5. ஆசிரியரின் உச்சரிப்பை மாணவர்கள் சரியாகப் பின்பற்றுகிறார்களா என அறிய உதவுகின்றது.

**அமரர் க.இ. குமாரசுவாமி அவர்களின் சிந்தனைகள், எண்ணக்கருக்கள், சேவைகள் பிரதிபலிக்கும் ஆன்மீக, சமூக நிறுவனங்கள்.**



வடகோவை ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி கோயில்



கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில்



விளைபொருள் விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்



வட கோவை மகிழடி உக்கிர வைரவர் தேவஸ்தானம்


DIVISIONAL HOSPITAL KOPAY
AMBULANCE


MEDICAL OFFICER OF HEALTH
KOPAY




யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்
J/KOPAY SARAVANAPAVANANTHA VIDYALAYAM
ESTABLISHED :- 26-09-1926



கிராமிய வங்கி கோப்பாய்





வலி கிழக்கு பிரதேச செயலகம், கோப்பாய்





கோப்பாய் வடக்கு சனசமூக நிலையம்



கோப்பாய் வடக்கு கண்ணகை அம்மன் சனசமூக நிலையம்






தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்

Guru Printes, Thirun